
ISBN : 978-81-685845-7-0

# செந்தமிழறிஞர்கள்:108



## ‘கல்கி’ கிருஷ்ணமூர்த்தி

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/76.%20%E2%80%99%E0%AE%95%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E2%80%99%20%E0%AE%B0%E0%AE%BE.%E0%AE%95%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B7%E0%AF%8D%E0%AE%A3%E0%AE%AE%E0%AF%82%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF_1899

# செந்தமிழ்சிற்பிகள்

## *’கல்கி’ ரா.கிருஷ்ணமூர்த்தி (1899-1954)*



### அறிமுகம்

கல்கி (செப்டம்பர் 9, 1899 - டிசம்பர் 5, 1954) புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர் ஆவார். இவர் இயற்பெயர் ரா. கிருஷ்ணமூர்த்தி. 35 சிறுகதைத் தொகுதிகள், புதினங்கள், கட்டுரைகள், பயணக்கட்டுரைகள் மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். எனினும், மிகச் சிறந்த சமூக மற்றும் வரலாற்றுப் புதினங்களை எழுதியதற்காக பரவலாக அறியப்படுகிறார். இவர் எழுதிய பொன்னியின் செல்வன் புதினம் மிகப் புகழ் பெற்றதாகும். தன் படைப்புகள் மூலம் இந்திய தேசிய விடுதலை போராட்டத்திற்கும் பங்களித்திருக்கிறார். தியாகபூமி புதினம் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது.

கல்கி அவர்கள் 1899-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் தேதி பழைய சென்னை மாகாணத்தில் ஒன்றிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள

மயிலாடுதுறை அருகே அமைந்த பட்டமங்கலம் எனும் ஊரில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். ஆரம்பப்பள்ளிப் படிப்பைத் தனது கிராமத்தில் முடித்த பிறகு அவர் திருச்சியில் உள்ள தேசிய உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். 1921-இல் மகாத்மா காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவங்கிய போது, அவரது கருத்துகளால் ஈர்க்கப்பட்டு கல்கி தனது பள்ளிப்படிப்பைப் பாதியில் துறந்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். 1922-இல் சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்றதற்காக ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார். 1923-இல் அவர் நவசக்தி என்னும் பத்திரிக்கையின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். அவருடைய முதல் புத்தகம் ஏட்டிக்குப் போட்டி 1927-இல் வெளியானது.

சமஸ்கிருதமும் தியாகராஜரின் தெலுங்கு கீர்த்தனைகளும் பிரபலமாக இருந்து வந்த அக்காலகட்டத்தில் தமிழிசைக்காகக் கல்கி சதாசிவம் மற்றும் எம். எஸ். சுப்புலட்சுமியுடன் இணைந்து பாடுபட்டார் கல்கி. தமிழ் இசை குறித்த கல்கியின் சிந்தனைகளைத் "தரம் குறையுமா" எனும் புத்தக வடிவில் வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

**புதினங்கள்**

கள்வனின் காதலி (1937)
தியாகபூமி (1938-1939)
மகுடபதி (1942)
அபலையின் கண்ணீர் (1947)
சோலைமலை இளவரசி (1947)
அலை ஓசை (1948)
தேவகியின் கணவன் (1950)
மோகினித்தீவு (1950)
பொய்மான் கரடு (1951)
புன்னைவனத்துப் புலி (1952)
அமரதாரா (1954)
வரலாற்று புதினங்கள்
சிவகாமியின் சபதம் (1944 – 1946)[1]
பார்த்திபன் கனவு (1941 - 1943)
பொன்னியின் செல்வன் (1951 – 1954)[2]
சிறுகதைகள்

சுபத்திரையின் சகோதரன்
ஒற்றை ரோஜா
தீப்பிடித்த குடிசைகள்
புது ஓவர்சியர்
வஸ்தாது வேணு
அமர வாழ்வு
சுண்டுவின் சந்நியாசம்
திருடன் மகன் திருடன்
இமயமலை எங்கள் மலை
பொங்குமாங்கடல்
மாஸ்டர் மெதுவடை
புஷ்பப் பல்லக்கு
பிரபல நட்சத்திரம்
பித்தளை ஒட்டியாணம்
அருணாசலத்தின் அலுவல்
பரிசல் துறை
ஸுசீலா எம். ஏ.
கமலாவின் கல்யாணம்
தற்கொலை
எஸ். எஸ். மேனகா
சாரதையின் தந்திரம்
கவர்னர் விஜயம்
நம்பர்
ஒன்பது குழி நிலம்
புன்னைவனத்துப் புலி
திருவழுந்தூர் சிவக்கொழுந்து
ஜமீன்தார் மகன்
மயிலைக் காளை
ரங்கதுர்க்கம் ராஜா
இடிந்த கோட்டை
மயில்விழி மான்
நாடகக்காரி
"தப்பிலி கப்"
கணையாழியின் கனவு
கேதாரியின் தாயார்
காந்திமதியின் காதலன்
சிரஞ்சீவிக் கதை
ஸ்ரீகாந்தன் புனர்ஜன்மம்
பாழடைந்த பங்களா
சந்திரமதி
போலீஸ் விருந்து

கைதியின் பிரார்த்தனை
காரிருளில் ஒரு மின்னல்
தந்தையும் மகனும்
பவானி, பி. ஏ, பி. எல்
கடிதமும் கண்ணீரும்
வைர மோதிரம்
வீணை பவானி
தூக்குத் தண்டனை
என் தெய்வம்
எஜமான விசுவாசம்
இது என்ன சொர்க்கம்
கைலாசமய்யர் காபரா
லஞ்சம் வாங்காதவன்
ஸினிமாக் கதை
எங்கள் ஊர் சங்கீதப் போட்டி
ரங்கூன் மாப்பிள்ளை
தேவகியின் கணவன்
பால ஜோசியர்
மாடத்தேவன் சுனை
காதறாக் கள்ளன்
மாலதியின் தந்தை
வீடு தேடும் படலம்
நீண்ட முகவுரை
பாங்கர் விநாயகராவ்
தெய்வயானை
கோவிந்தனும் வீரப்பனும்
சின்னத்தம்பியும் திருடர்களும்
விதூஷகன் சின்னுமுதலி
அரசூர் பஞ்சாயத்து
கவர்னர் வண்டி
தண்டனை யாருக்கு?
சுயநலம்
புலி ராஜா ,
விஷ மந்திரம்

**விருதுகள்**


சாகித்திய அகாதமி விருது, 1956 அலை ஓசை

சங்கீத கலாசிகாமணி விருது, 1953, வழங்கியது: தி இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைட்டி (ஆளுனர் ஸ்ரீ பிரகாசா தலைமை)

(😊)(😊) @@@@@ (😊)(😊)

# கல்கி கிருஷ்ணமூர்த்தி: பொன்னியின் செல்வன் எழுத்தாளரின் பன்முகத் தன்மை

https://www.bbc.com/tamil/arts-and-culture-62955425



ராஜாஜி, கல்கி சதாசிவத்துடன் கல்கி கிருஷ்ணமூர்த்தி (இடமிருப்பவர்)

- முரளிதரன் காசி விஸ்வநாதன்
  - பதவி,பிபிசி தமிழ்
- 20 செப்டெம்பர் 2022

**தமிழ் வெகுஜன இலக்கிய உலகில் நீங்காத இடத்தைப் பெற்ற 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி - சிறுகதை, நாவல், கட்டுரைகள், இதழாளர், சுதந்திர போராட்ட வீரர், அரசியல் செயற்பாட்டாளர், சினிமா எழுத்தாளர் என பன்முகத் தன்மை வாய்ந்தவர்.**

கடந்த சில ஆண்டுகளில் 'கல்கி' என்ற பெயர் பெரிதும் 'பொன்னியின் செல்வன்' என்ற மகத்தான நாவலுடன் இணைத்தே அறியப்படுகிறது. ஆனால், கல்கி வெறும் ஒரு நாவலின் ஆசிரியர் மட்டுமல்ல. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர். பாடலாசிரியர். சொந்தமாக பத்திரிகை நடத்தியவர். திரு.வி. கல்யாண சுந்தரனாருடன் நெருங்கிய தொடர்புகொண்டவர், அரசியல் செயல்பாட்டாளர் என பன்முகம் கொண்டவர்.

பழைய தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த, தற்போது தனி மாவட்டமாக உள்ள மயிலாடுதுறையிலிருந்து எட்டு மைல் தூரத்தில் இருக்கும் புத்தமங்கலம் என்ற கிராமத்தில் ராமசாமி - தையல்நாயகி தம்பதியின் இரண்டாவது குழந்தையாக 1899ஆம் ஆண்டு செப்டம்பர் 9ஆம் தேதி பிறந்தார் கிருஷ்ணமூர்த்தி (கல்கி). இவருடைய தந்தை அருகில் உள்ள மணல்மேடு கிராமத்தின் கர்ணமாக விளங்கினார்.

சிறுவயதிலேயே அவரது தந்தையார் இறந்துவிட, உறவினர்களின் ஆதரவிலேயே கிருஷ்ணமூர்த்தி வளர்ந்தார். அவரது பக்கத்து வீட்டில் இருந்த ஐயாசாமி என்பவர், கிருஷ்ணமூர்த்தியின் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார். அவரிடமிருந்தே புத்தகங்கள் மீதான ஆர்வத்தை கிருஷ்ணமூர்த்தி வளர்த்துக்கொண்டார்.

சிறிய வயதிலேயே, தமிழில் வெளிவந்திருந்த நாவல்களில் பெரும்பாலானவற்றை படித்து முடித்த கிருஷ்ணமூர்த்தி, பிறகு ஆங்கில எழுத்துகளின் மீது கவனத்தைத் திருப்பினார். சார்லஸ் டிக்கென்ஸ், அலெக்ஸாந்தர் த்யூமா ஆகியோரின் படைப்புகளை மிகுந்த தீவிரத்தோடு வாசித்தார்.

புத்தகங்களின் மீது கல்கிக்கு பெரும் ஆர்வம் இருந்தபோதிலும் ஐந்தாம் வகுப்புக்கு மேல் உடனடியாக படிப்பைத் தொடர முடியவில்லை. இந்தத் தருணத்தில் 'சந்திரகாசன் என்ற தனது முதல் நாடகத்தை எழுதினார் கிருஷ்ணமூர்த்தி.

இதற்குப் பிறகு, திருச்சியில் இருந்த தன்னுடைய சிறிய தாயாரின் வீட்டில் இருந்தபடி படிப்பைத் தொடர ஆரம்பித்தார். அதற்குப் பிறகு தேசிய உயர்நிலைப் பள்ளியில் இடம் கிடைத்தது. பள்ளிப் படிப்பை முடிக்கும் நேரத்தில் 1921ஆம் ஆண்டின் நாகபுரி காங்கிரஸ் கூட்டத் தீர்மானம் வெளியிடப்பட்டது.

சட்டமன்றங்களைப் புறக்கணிப்பது, நீதிமன்றங்களைப் புறக்கணிப்பது, மாணவர்கள் கல்விக்கூடங்களைப் புறக்கணிப்பது ஆகிய தீர்மானங்கள் இதில் இருந்தன. பள்ளி இறுதித் தேர்வை எழுதவிருந்த கிருஷ்ணமூர்த்தி, இந்தத் தீர்மானத்தின்படி தேர்வை எழுதாமல் பள்ளியிலிருந்து

வெளியேறினார். சுதந்திரப் போராட்ட வீரர் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனின் பேச்சைக்கேட்டு கல்கி இந்த முடிவை எடுத்தார்.

# கல்கி கிருஷ்ணமூர்த்தி

https://www.hindutamil.in/news/blogs/58107-10.html

ராஜலட்சுமி சிவலிங்கம்

புகழ்பெற்ற எழுத்தாளரும், தமிழில் சரித்திரக் கதைகளின் முன்னோடியுமான 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி (Kalki R.Krishnamurthy) பிறந்த தினம் இன்று (செப்டம்பர் 9). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

# தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையை அடுத்த புத்தமங்கலத்தில் (1899) பிறந்தார். அங்கு ஆரம்பக் கல்வி பயின்ற பிறகு, திருச்சி இ.ஆர். உயர்நிலைப் பள்ளியிலும், தேசியக் கல்லூரியிலும் படிப்பைத் தொடர்ந்தார்.

# காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தால் ஈர்க்கப்பட்ட இவர், படிப்பை விட்டுவிட்டு கரூரில் நாமக்கல் கவிஞர் தலைமையில் நடந்த கூட்டத்தில் பேசி கைதானார். சிறையில் இவர் எழுதிய 'விமலா' என்ற முதல் நாவல், 'சுதந்தரன்' பத்திரிகையில் வெளியானது.

# விடுதலையான பிறகு, திருச்சி காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் வேலை செய்தார். இவர் எழுதிய பிரச்சார துண்டுப் பிரசுரங்களைப் பார்த்த காங்கிரஸ் தலைவர் டிஎஸ்எஸ் ராஜன், 'நீ எழுத்துலகில் சாதிக்கவேண்டியவன்' என்றார். அவரது ஆலோசனைப்படி 'நவசக்தி' பத்திரிகையில் சேர்ந்தார்.

# புதிதாக தொடங்கப்பட்ட 'ஆனந்தவிகடன்' இதழுக்கு 'ஏட்டிக்குப் போட்டி' என்ற நகைச்சுவைக் கட்டுரையை அனுப்பினார். பொறுப்பாசிரியர் எஸ்.எஸ்.வாசனுக்கு அது பிடித்ததால், விகடனில் தொடர்ந்து எழுதும் வாய்ப்பு கிடைத்தது. 'கல்கி' என்ற புனைப்பெயரில் எழுதினார். தமிழ்த்தேனீ, அகஸ்தியன், லாங்கூலன், ராது, தமிழ்மகன், விவசாயி என்ற பெயர்களிலும் எழுதிவந்தார்.

# ராஜாஜியின் 'விமோசனம்' பத்திரிகையின் துணை ஆசிரியரானார். உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்று சிறை சென்றார். விடுதலையானதும், ஆனந்த விகடன் பொறுப்பாசிரியரானார். இவரது முதல் தொடர்கதையான 'கள்வனின்

காதலி', திரைப்படத்துக்காகவே இவர் எழுதிய 'தியாகபூமி' நாவல் பெரும் வரவேற்பைப் பெற்றன.

# நண்பர் டி.சதாசிவத்துடன் சேர்ந்து சொந்தமாக பத்திரிகை தொடங்க விரும்பினார். சதாசிவத்தின் மனைவி எம்.எஸ்.சுப்புலட்சுமி வழங்கிய நிதியுடன் 'கல்கி' பத்திரிகை தொடங்கப்பட்டது. இவரது படைப்பாற்றலால் பத்திரிகை விரைவிலேயே அபார வெற்றி பெற்றது.

# 'மீரா' திரைப்படத்துக்கு கதை, வசனத்துடன், 'காற்றினிலே வரும் கீதம்' உள்ளிட்ட பாடல்களையும் எழுதினார். தமிழ் இசைக்காக சதாசிவம் - எம்.எஸ். தம்பதியுடன் இணைந்து பாடுபட்டார்.

# 35 சிறுகதைத் தொகுதிகள், புதினங்கள், கட்டுரைகள், பயணக் கட்டுரைகள், வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். இவரது 'பார்த்திபன் கனவு', தமிழின் முதல் சரித்திர நாவல். அடுத்து வந்த வரலாற்றுப் புதினமான 'சிவகாமியின் சபதம்', சமூகப் புதினமான 'அலைஓசை' ஆகியவையும் பெரும் வரவேற்பைப் பெற்றன.

# 1952-ல் எழுதத் தொடங்கி 3 ஆண்டுகள் தொடராக வெளிவந்த 'பொன்னியின் செல்வன்' நாவல், கல்கியின் பெயருக்கு வரலாற்றில் நீங்காத இடத்தைப் பெற்றுத் தந்தது. அது இன்றுவரை பலமுறை மறுபதிப்பு செய்யப்படுகிறது. 'கல்கி' இதழில் மீண்டும் மீண்டும் தொடராக வெளிவருகிறது.

# முன்னோடி பத்திரிகையாளர், புனைகதை எழுத்தாளர், கலை விமர்சகர், கட்டுரையாளர், பாடல் ஆசிரியர், சுதந்திரப் போராட்ட வீரர் எனப் பன்முகத் தன்மை கொண்ட கல்கி 55-வது வயதில் (1954) மறைந்தார். இவரது படைப்புகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

---

# 'கல்கி'

https://tamildigitallibrary.in/nationalisedbooks/author-detail/208

கல்கி என்று அழைக்கப்படும் ரா. கிருஷ்ணமூர்த்தி, தமிழ் இதழியல் முன்னோடிகளில் ஒருவர். சுதந்திரப் போராட்ட வீரர். தமிழிசை இயக்கத்தை முன்னெடுத்தவர். கல்கி வார இதழை நிறுவியவர். பொன்னியின்

செல்வன், சிவகாமியின் சபதம் போன்ற வரலாற்று நாவல்களை எழுதி புகழ் பெற்றவர்.

அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் இருந்த புத்தமங்கலம் கிராமத்தில் ஆரம்பப்பள்ளிப் படிப்பைத் முடித்த பின்னர், மாயூரம் முனிசிபல் உயர்நிலைப் பள்ளியில் படித்தார். பிறகு திருச்சி தேசிய உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார். இளமையிலேயே தேசிய இயக்கத்தில் இணைந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டமையால் பள்ளிப்படிப்பை முழுமையாக முடிக்கவில்லை.

சுதந்திரப் போராட்டத்திலும், காங்கிரஸ் கட்சியிலும் பணியாற்றி, நீண்ட காலம் அரசியல் பயணம் செய்தவர் கல்கி. 1921-ல் காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைத் துவங்கப்பட்டபோது, மகாத்மா காந்தியின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். 1922-ல் சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்று ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார். விடுதலையானதும் அப்போது திருச்சியில் இருந்த தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையகத்தில் வேலையில் சேர்ந்தார். அதன் பின்னர் சிலகாலம் ஈரோடு கதர் அலுவலகத்தில் வேலை செய்தார். 1923-ல் திரு.வி. கல்யாணசுந்தரனார் நடத்தி வந்த நவசக்தி என்னும் பத்திரிக்கையின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார்.

கல்கி 1924-ல் ருக்மணி என்பவரை மணந்தார். இவர்களுக்கு ராஜேந்திரன் என்ற மகனும், ஆனந்தி என்ற மகளும் பிறந்தனர்.

1925 ஆம் ஆண்டு ராஜாஜி திருச்செங்கோட்டில் காந்தி ஆசிரமத்தை தொடங்கி அங்கிருந்து விமோசனம் என்னும் இதழையும் வெளியிடத் தொடங்கினார். முதன்மையாக குடிப்பழக்கத்துக்கு எதிராகப் பேசிய இதழ் இது. கல்கி திருச்செங்கோடு சென்று ராஜாஜியுடன் தங்கி விமோசனம் இதழை பொறுப்பேற்று நடத்தினார்.

கல்கி தன் அரசியல் வழிகாட்டியாக ராஜாஜியை ஏற்றுக் கொண்டவர். ராஜாஜியின் அரசியலை தானும் மேற்கொண்டு இறுதிவரை உடனிருந்தார். ராஜாஜியின் போர்வாள் என அறியப்பட்டார். 1930-ல் ராஜாஜி ஒருங்கிணைத்த உப்பு சத்தியாக்கிரகத்திலும் கலந்துக் கொண்டு உப்பு காய்ச்சி சட்டத்தை மீறி சிறை சென்றார். ஆறுமாதம் சிறையில் இருந்தார்.

1931-ல் எஸ்.எஸ். வாசன் தொடங்கி நடத்திய ஆனந்த விகடன் இதழில் துணை ஆசிரியரானார். ஆனந்த விகடனை வெற்றிகரமான பொதுவாசிப்புக்குரிய இதழாக ஆக்கியவர் கல்கி. தமிழில் பொழுதுபோக்கு வாசிப்பை ஓர் இயக்கமாக ஆக்கி அதில் திரைப்பட விமர்சனம், அரசியல் விமர்சனம் என பல களங்களில் பல கட்டுரைகளை எழுதினார்.

1940-ல் காந்தி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை அறிவித்தபோது ஆனந்த விகடனில் ஆசிரியர் வேலையை உதறிவிட்டு அப்போராட்டத்தில் ஈடுபட்டார். மூன்றுமாதம் கடுங்காவல் தண்டனை பெற்றார். பின்னர் எஸ்.எஸ். வாசனுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் ஆனந்த விகடனில் இருந்து விலகி 1941-ல் கல்கி இதழை தன் நண்பர் கல்கி சதாசிவம் உதவியுடன் நிறுவினார். கல்கி இதழுக்கு ராஜாஜியின் வாழ்த்தும் கிடைத்தது.

கல்கியில் அவர் தன் முதல் வரலாற்றுக் கற்பனாவாத நாவலான பார்த்திபன் கனவை எழுதினார். கல்கியில் அவர் எழுதிய வரலாற்றுத் தொடர்கதைகளால் அது மிக வெற்றிகரமான இதழாக மாறியது. அதன்பின் புகழ்பெற்ற சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் நாவல்களை கல்கி இதழில் தொடராக எழுதினார்.

பொதுவாசகர்களுக்கு உகந்த வேடிக்கையும் நையாண்டியும் கொண்ட எளிமையான நடையை வளர்த்தெடுத்தார். அவரைப் போலவே எழுதும் தேவன், துமிலன், மாயாவி, ஆர்வி போன்ற எழுத்தாளர்களின் வரிசை ஒன்றை உருவாக்கினார். கல்கி இதழில் தன்னுடைய எழுத்து முறையைச் சாராத எழுத்தாளர்களின் வரிசை ஒன்றையும் கல்கி உருவாக்கினார். மாயாவி, விந்தன், நா. பார்த்தசாரதி, ர.சு.நல்லபெருமாள் போன்றவர்களும் கல்கி மூலமாக உருவானவர்களே. தமிழ் இதழியலிலும் தமிழ் வணிகக் கேளிக்கை புனைவெழுத்திலும் கல்கியே முதன்மைச் சாதனையாளரும் முன்னோடியுமாவார்.

கல்கிக்கு இதழியல் சார்ந்த எழுத்தில் முன்னோடியாக கூறத்தக்கவர் வ.ரா. என்று அழைக்கப்பட்ட வ.ராமசாமி ஐயங்கார். வ.ரா எழுதிய நடைச்சித்திரம் என்னும் எழுத்து முறையின் சாயலை கல்கியின் பல படைப்புகளில் காணலாம். மகாகவி பாரதியாரின் உரைநடையின் தொடர்ச்சி என்று கல்கியின் எழுத்துக்களை கூர்ந்து நோக்கியவர்கள் வரையறை செய்துள்ளனர்.

தனது இறுதிக்காலம் வரை கல்கி இதழை தொடங்கி நடத்தினார். அவரது மகன் கி. ராஜேந்திரன், தனது தந்தையின் மறைவுக்குப் பின் கல்கி இதழின் ஆசிரியராக இருந்தார். கல்கி ராஜேந்திரனும், மகள் ஆனந்தியும் எழுத்தாளர்கள். கல்கி எழுதி

முடிக்காமல் விட்ட அமரதாரா நாவலை அவர் மறைவுக்குப் பின் ஆனந்தி எழுதி முடித்தார்.

பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு, அலை ஓசை போன்ற நாவல்கள் ஆங்கிலத்தில் பலரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம் போன்ற படைப்புகள் பல்வேறு நாடகக் குழுக்களால் நாடகமாக அரங்கேற்றப்பட்டுள்ளன. கல்கி எழுதிய ‘அலை ஓசை’ நாவலுக்கு சாகித்திய அகாதெமியின் சிறந்த நாவலுக்கான விருது கிடைத்தது.

காந்தியின் ஹரிஜன இயக்கம், ஆலயப் பிரவேச இயக்கம் ஆகியவற்றை ஆதரித்து அன்றைய வைதிகர்களிடம் கருத்துப்போர் செய்தார். 1939-ல் மகாத்மா காந்தி ஆலய நுழைவுப் போராட்டம் அறிவித்தபோது, காஞ்சி சங்கராச்சாரியார் சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அதற்கு கல்கி, 'நீங்கள் ஒரு சாதியின் தலைவர்தான், ஜகத்குருவெல்லாம் அல்ல' என கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார். அவருடைய அந்த கருத்து பெரிய சர்ச்சையைக் கிளப்பியது.

தமிழிசை இயக்கத்தை நிலைநாட்டியதில் கல்கியின் எழுத்துக்கள் முக்கியமானவை. தமிழிசை இயக்கத்தின் முதன்மையான பிரச்சாரகர்களில் கல்கியும் ஒருவர். தெலுங்கு கீர்த்தனங்கள் மட்டுமே பாடப்பட்டு வந்த சபாக் கச்சேரிகளில், தமிழிசையும் பாடப்பட வேண்டும் என்று முன்னெடுத்தவர்களில் கல்கியும் ஒருவர். தமிழிசை இயக்கத்தை ஆதரித்து ஏராளமான கட்டுரைகளை எழுதினார். கர்நாடகம் என்னும் புனைபெயரில் அவர் எழுதிய இசை விமர்சனக் கட்டுரைகள் புகழ்பெற்றவை. 1941-ம் ஆண்டு சென்னையில் ராஜா அண்ணாமலை செட்டியார் முன்னெடுப்பில் நடந்த முதலாவது தமிழிசை மாநாட்டில் கலந்துக் கொண்டார். இராஜாஜி, ரசிகமணி டி.கே.சி., கல்கி சதாசிவம், எம்.எஸ். சுப்புலட்சுமி போன்றோர் கல்கியின் தமிழிசை இயக்கத்தில் இணைந்து செயல்பட்டவர்கள்.

1945-ல் தமிழிசை மாநாட்டுக்காக கல்கி எட்டையபுரம் சென்றபோது, அவ்விழாவில் பாரதிக்கு எட்டையபுரத்தில் ஒரு மணிமண்டபம் கட்டப்பட வேண்டும் என்னும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்கான பொறுப்பை தான் ஏற்பதாக அறிவித்த கல்கி, தன் இதழில் அதற்கான நிதி வேண்டிய கோரிக்கையையும் விடுத்தார். அக்டோபர் 13, 1947-ல் மணிமண்டபம் ராஜாஜியால்

திறந்து வைக்கப்பட்டது. பாரதியின் துணைவி செல்லம்மா பாரதிக்காக நிதி திரட்டி ஒரு வைப்பு நிதியையும் உருவாக்கி அளித்தார்.

1936-ல் இந்தியாவின் மகாகவிகளின் பட்டியலில் சுப்பிரமணிய பாரதியார் வரமாட்டார் என்று கல்கி கருத்து தெரிவித்திருந்தார் என்பது இங்கு நினைவு கூறத்தக்கது. பாரதி அபிமானியான கு.ப. ராஜகோபாலன் போன்றவர்கள், கல்கியின் இந்த கருத்துக்கு மறுப்பு தெரிவித்தனர். பரபரப்பை உண்டாக்கிய இது பாரதி மகாகவி விவாதம் என அப்போது அழைக்கப்பட்டது. இக்கட்டுரைகளை 1936-ல் 'கண்ணன் என் கவி' என்ற பெயரில் கு.ப. ராஜகோபாலன் தொகுத்து வெளியிட்டார்.

இதேபோன்று கல்கியை கடுமையாக விமர்சனம் செய்தவரான புதுமைப்பித்தன் 1948-ல் மறைந்தபின், வறுமையில் வாடிய அவருடைய மனைவி கமலாவையும் மகளையும் காப்பாற்றுவதற்காக கல்கி நிதி திரட்டினார். குறிப்பிடத்தக்க ஒரு தொகை புதுமைப்பித்தன் மனைவியிடம் அளிக்கப்பட்டது.

கல்கியின் எழுத்துக்கள் ஆங்கில நாவலாசிரியர்கள் வால்டர் ஸ்காட், அலக்ஸாண்டர் டூமா ஆகியோரின் நாவல்களை தழுவி எழுதப்பட்டவை என்று 1937-ல் புதுமைப்பித்தன் குற்றம் சாட்டினார். அதற்கு கல்கி மறுப்பு தெரிவித்தார். வெவ்வேறு இலக்கியவாதிகளும் அப்போது தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர். இது கல்கி - புதுமைப்பித்தன் தழுவல் விவாதம் என்ற பெயரில் அறியப்பட்டது.

கல்கி எழுதிய தியாகபூமி நாவல் கே. சுப்ரமணியம் இயக்கத்தில் 1939-ல் திரைப்பட எடுக்கப்பட்டது. இது தேச விடுதலையைத் தூண்டுவதாகக் கருதி ஆங்கிலேய அரசாங்கம் இத்திரைப்படத்திற்கு தடை விதித்தது. கல்கி எழுதிய கள்வனின் காதலி நாவல் அதே பெயரில் வி.எஸ். ராகவன் இயக்கத்தில் 1955-ல் திரைப்படமாக வெளிவந்தது. கல்கி எழுதிய பார்த்திபன் கனவு சரித்திர நாவல் யோகநாத் இயக்கத்தில் 1960-ல் திரைப்படமாகியது.

காசநோயால் அவதிப்பட்டு வந்த கல்கி, 1954 ஆம் ஆண்டு, டிசம்பர் 5 ஆம் தேதி, 55 வயதிலேயே காலமானார்.

### புதினங்கள்

1. கள்வனின் காதலி (1937)
2. தியாகபூமி (நாவல்) (1939)]
3. பார்த்திபன் கனவு (1941 - 1943)

4. மகுடபதி (1942)
5. சிவகாமியின் சபதம் (1944 - 1946)
6. அபலையின் கண்ணீர் (1947)
7. சோலைமலை இளவரசி (1947)
8. அலை ஓசை (1948)
9. தேவகியின் கணவன் (1950)
10. மோகினித்தீவு (1950)
11. பொய்மான் கரடு (1951)
12. புன்னைவனத்துப் புலி (1952)
13. பொன்னியின் செல்வன் (1951 - 1954)
14. அமரதாரா (1954)

**சிறுகதைகள் / கட்டுரைகள்**

1. சுபத்திரையின் சகோதரன்
2. ஒற்றை ரோஜா
3. தீப்பிடித்த குடிசைகள்
4. புது ஓவர்சியர்
5. வஸ்தாது வேணு
6. அமர வாழ்வு
7. சுண்டுவின் சந்நியாசம்
8. திருடன் மகன் திருடன்
9. இமயமலை எங்கள் மலை
10. பொங்குமாங்கடல்
11. மாஸ்டர் மெதுவடை
12. புஷ்பப் பல்லக்கு
13. பிரபல நட்சத்திரம்
14. பித்தளை ஒட்டியாணம்
15. அருணாசலத்தின் அலுவல்
16. பரிசல் துறை
17. ஸுசீலா எம். ஏ.
18. கமலாவின் கல்யாணம்
19. தற்கொலை
20. எஸ். எஸ். மேனகா
21. சாரதையின் தந்திரம்
22. கவர்னர் விஜயம்
23. ஒன்பது குழி நிலம்
24. புன்னைவனத்துப் புலி

62. நீண்ட முகவுரை
63. பாங்கர் விநாயகராவ்
64. தெய்வயானை
65. கோவிந்தனும் வீரப்பனும்
66. சின்னத்தம்பியும் திருடர்களும்
67. விதூஷகன் சின்னுமுதலி
68. அரசூர் பஞ்சாயத்து
69. கவர்னர் வண்டி
70. தண்டனை யாருக்கு?
71. சுயநலம்
72. புலி ராஜா
73. விஷ மந்திரம்
74. ஏட்டிக்குப் போட்டி - நகைச்சுவை கட்டுரைகள்
75. சங்கீத யோகம் - தமிழிசை குறித்த கட்டுரைகள் (1947)

## ஆசிரியர் பற்றிய விவரம்

| | |
|---|---|
| **ஆசிரியர் பெயர்** | கல்கி |
| **இயற்பெயர்** | இரா. கிருஷ்ணமூர்த்தி |
| **புனைபெயர்கள்** | கர்நாடகம், தமிழ்த்தேனீ, ராது, அகஸ்தியன், லாங்கூலன், தமி |
| **பிறந்த ஆண்டு** | 1899, செப்டம்பர் 9 |
| **பெற்றோர்** | ராமசாமி – தையல்நாயகி |
| **வாழ்க்கைத் துணை** | ருக்மணி |
| **குழந்தைகள்** | இராஜேந்திரன், ஆனந்தி |
| **பணி** | எழுத்தாளர் |
| **பதவிகள்** | 1. அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்; 2. கல்கி ஆசிரியர்; 3. விமோசனம் பத்திரிகை ஆசிரியர்; 4. நவசக்தி பத் ஆசிரியர்; 5. ஆனந்த விகடன் பத்திரிகை துணை ஆசிரியர் |
| **குறிப்பிடத்தக்க படைப்புகள்** | பொன்னியின் செல்வன், தியாக பூமி, அலை ஓசை, சிவகாமியி பார்த்திபன் கனவு |
| **பிறந்த ஊர்** | புத்தமங்கலம் |
| **வட்டம்** | மணல்மேடு |
| **மாவட்டம்** | தஞ்சாவூர் |
| **மாநிலம்** | தமிழ்நாடு |
| **நாடு** | இந்தியா |
| **அரசியல் / இயக்கம்** | இந்திய விடுதலை இயக்கம், இந்திய தேசிய காங்கிரஸ் |

| | |
|---|---|
| விருதுகள் / பட்டங்கள் | சாகித்திய அகாதெமி விருது, சங்கீத கலாசிகாமணி விருது |
| நாட்டுடைமை ஆண்டு | 1998 |
| இறப்பு | 1954, டிசம்பர் 5 |
| இறந்த ஊர் | சென்னை |
| குறிச்சொற்கள் | கல்கி, பொன்னியின் புதல்வர், இந்திய விடுதலை இயக்கம், சு திரப் வீரர், பத்திரிகையாளர், சரித்திர நாவலாசிரியர், எழுத்தாளர் |
| | |

# இலக்கிய வாழ்க்கை

https://tamil.wiki/wiki/%E0%AE%95%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF_(%E0%AE%8E%E0%AE%B4%E0%AF%81%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%B3%E0%AE%B0%E0%AF%8D)



**கல்கி கிருஷ்ணமூர்த்தி, கல்கி சதாசிவம், நடுவே ராஜாஜி**

கல்கியின் இலக்கிய வாழ்க்கையை விமர்சகர்கள் மூன்று காலகட்டங்களாக பிரிப்பார்கள். முதல் காலகட்டம் 1923 முதல் 1931 வரை அவர் நவசக்தி இதழில் பணியாற்றிய பகுதி. இரண்டாவது காலகட்டம் 1931 முதல் 1941 முதல் அவருடைய மறைவுக்காலம் வரை அவர் ஆனந்த விகடன் இதழில் எழுதிய பகுதி. மூன்றாவது காலகட்டம் 1941 முதல் 1954-ல் மறைவது வரை கல்கி தானே நடத்திய கல்கி இதழில் எழுதிய பகுதி. உருவாக்க காலம், வளர்ச்சிக்காலம், முதிர்வுக்காலம் என அவற்றை வரையறை செய்யலாம்.

### நவசக்தி காலம்

1923 முதல் திரு.வி. கல்யாணசுந்தர முதலியாரிடம் நவசக்தி இதழில் பணியாற்றிய காலகட்டத்தில் கல்கி இதழியல் எழுத்துமுறையைக் கற்றார் (கல்கி என்பது கல்யாணசுந்தரனார்- கிருஷ்ணமூர்த்தி என்பதன் சுருக்கம் என சிலர் எழுதியதுண்டு, ஆனால் கல்கி வேறு விளக்கம் அளித்துள்ளார்) திரு.வி.கல்யாணசுந்தர முதலியாரின் தனித்தமிழ் நடையை கல்கி பின்பற்றவில்லை. பெரும்பாலும் சி.சுப்ரமணிய பாரதியாரின் உரைநடை எழுத்துதான் கல்கிக்கு முன்தொடர்ச்சியாக இருந்துள்ளது.


காந்தி நவஜீவன் இதழில் 1925 முதல் 1929 வரை எழுதி வந்த சுயசரிதையை கல்கி சுருக்கமாக மொழியாக்கம் செய்து நவசக்தியில் வெளியிட்டார் நவசக்தியில் கதைகளும் எழுதினார். எட்டு சிறுகதைகள் கொண்ட சாரதையின் தந்திரம் என்னும் தொகுப்பு கல்கி வெளியிட்ட முதல் புனைகதைநூல். 1927-ல் சி.ராஜகோபாலாச்சாரியார் முன்னுரையுடன் இந்நூல் வெளியாகியது.'பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லை' என்று ராஜாஜி முன்னுரையுடன் வெளிவந்தாலும் அந்நூல் விற்பனையாகவே இல்லை என கல்கி பதிவுசெய்துள்ளார்.

கல்கி தன் 23-ஆவது வயதில் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு சிறையில் இருந்தபோது 'விமலா' என்ற நாவலை எழுதினார். 1923-ல் அந்நாவலை வ.ராமசாமி ஐயங்கார் (வ.ரா.) தான் நடத்திவந்த சுதந்திரன் என்னும் இதழில் தொடராக வெளியிட்டார். இந்நாவல் ரா. கிருஷ்ணமூர்த்தி என்ற பெயரில் வெளிவந்தது. இது ஒத்துழையாமை இயக்கத்தில் சிறைசென்ற ஓர் இளைஞனைப் பற்றியது. தன்வரலாற்றுத்தன்மை கொண்டது.

நவசக்தியில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது திருச்செங்கோட்டில் சி.ராஜகோபாலாச்சாரியார் பிப்ரவரி 6, 1925 அன்று காந்தி ஆசிரமத்தை தொடங்கி அங்கிருந்து வெளியிட்ட விமோசனம் என்னும் இதழில் கல்கி இக்காலகட்டத்தில் அரசியல் கட்டுரைகளையும் சில கதைகளையும் எழுதினார்.

## ஆனந்தவிகடன் காலம்

1928 பிப்ரவரியில் ஆனந்த விகடன் இதழ் தொடங்கப்பட்டபோது அதன் உரிமையாளராகிய எஸ்.எஸ். வாசனிடம் சி.சுப்ரமணிய பாரதியாரின் நண்பரான பரலி.சு. நெல்லையப்பர் கல்கியை அறிமுகப்படுத்தினார். ஏட்டிக்குட் போட்டி என்ற நகைச்சுவைக் கட்டுரையை கல்கி ஆனந்த விகடனில் எழுதினார். கல்கி என்ற புனைபெயரில் கிருஷ்ணமூர்த்தி எழுதிய முதல் கட்டுரை இதுதான். கல்கி பாணி என பின்னர் உருவான நையாண்டித்தன்மை கொண்ட கட்டுரை அது.தமிழ்த்தேனீ, அகஸ்தியன், லாங்கூலன், ராது, தமிழ்மகன், விவசாயி என்ற பெயர்களிலும் எழுதிவந்தார்.




**கல்கி கதை**

கல்கி அவதாரம் போல சுதந்திரப்போர் என்னும் பிரளயத்தில் தான் மிதப்பதாக எண்ணி கல்கி என பெயர் வைத்துக்கொண்டதாக கல்கி எழுதியிருக்கிறார். கல்கி என்ற பெயரில் அவர் எழுதிய முதல் தொடர்கதை கள்வனின் காதலி ஆனந்த விகடனில் 1937-ம் ஆண்டு வெளியானது. கள்வனின் காதலிக்குப் பின் விகடனில் எழுதிய 'தியாகபூமி' கூடவே திரைப்படமாகவும் வெளிவந்தது.

### கல்கி காலம்

1941-ல் கல்கி தன் இதழான கல்கியை தொடங்கி அதில் எழுதினார். ரசமட்டம் என்ற பெயரில் திரைவிமர்சனங்கள், கர்நாடகம் என்னும் பெயரில் இசை

விமர்சனங்கள், நடைவழிக்குறிப்புகள், அரசியல் கட்டுரைகள் என இதழின் பெரும்பகுதி கல்கியாலேயே எழுதப்பட்டது.

கல்கியின் புகழ்பெற்ற பெருநாவல்கள் கல்கி இதழில் எழுதப்பட்டவை. பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் போன்ற நாவல்கள் அதன்பின் அவர் நடத்திய கல்கி இதழில் வெளியாயின. 1952-ல் அவர் எழுதத்தொடங்கிய பொன்னியின் செல்வன் அவருடைய முதன்மையான நாவல். பொன்னியின் செல்வன் தமிழின் முதன்மையான பொழுதுபோக்கு இலக்கியப் படைப்பு என்று ஏற்கப்பட்டுள்ளது.

## இலக்கிய இடம்




கல்கி, அஜந்தா குகையில். எல்லிஸ் ஆர் டங்கனுடன்

கல்கியின் முதன்மையான இலக்கிய செயல்பாடு தமிழ் உரைநடை உருவாக்கத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பே. பொழுதுபோக்கு நாவல்கள், இதழியல் கட்டுரைகள், சிறுகதைகள், பயணக்கட்டுரைகள், இசைவிமர்சனம், திரைப்பட விமர்சனம், அரசியல் விமர்சனம், நையாண்டிக்கட்டுரைகள் மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்கள் என பல தளங்களிலும் தொடர்ச்சியாக எழுதி தமிழ் உரைநடையின் எல்லா சாத்தியங்களையும் விரிவுபடுத்தினார். அவரை முன்னோடியாகக்கொண்டு மூன்று தலைமுறை எழுத்தாளர்கள் உருவாகி வந்தனர்.

கல்கியின் தியாகபூமி போன்ற தொடக்ககால நாவல்கள் ரெயினால்ட்ஸ் போன்றவர்கள் எழுதிய பரபரப்பும் மெல்லுணர்ச்சியும் கலந்த பொதுவாசிப்புக்குரிய ஆக்கங்கள். கல்கியின் கதை சொல்லும்

முறையில் வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் போன்ற முன்னோடிகளின் பாதிப்பும் இருந்தது. பின்னாளில் சரித்திர நாவல்களை எழுதினார். சர் வால்டர் ஸ்காட், அலெக்ஸாண்டர் டூமா போன்ற எழுத்தாளர்களைத் தனது முன்னோடிகளாக கல்கி குறிப்பிட்டிருக்கிறார். பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் போன்ற நாவல்களை இலக்கியவரையறையின்படி கற்பனாவாத உணர்ச்சிக் கதைகள் (Romance) என விமர்சகர்கள் வரையறுக்கிறார்கள்



பொன்னியின் புதல்வர்

ஆனால் தன் முன்னோடிகளைப் போல முற்றிலும் கேளிக்கை எழுத்தாக இல்லாமல் அன்று நிகழ்ந்து வந்த இந்திய தேசிய எழுச்சி, தமிழ்க் கலாசார மறுமலர்ச்சி, சமூக சீர்திருத்த நோக்கு ஆகியவற்றின் கூறுகள் கல்கியின் படைப்புகளில் இருந்தன. அவருடைய வரலாற்று நாவல்கள் தமிழர்களின் வரலாற்றுப் பொற்காலங்களை புனைந்து காட்டின. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி போன்றவர்கள் வரலாற்றாய்வு வழியாக உருவாக்கிய பல்லவர், சோழர் காலத்து வரலாற்று வரைவை கல்கி தன் புனைவுகள் வழியாக


மக்களிடம் கொண்டுசென்றார். அவை அப்போது உருவாகி வந்த தமிழ்த்தேசியப் பெருமிதத்தை வலுப்படுத்தின.

கல்கியின் நாவல்களில் தமிழகத்தின் பண்பாட்டுப் பரிணாமத்தின் சித்திரம் உள்ளது. சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் போன்ற நாவல்களில் பக்தி இயக்க நாயகர்களை புனைந்து காட்டுகிறார். அவருடைய சிவகாமியின் சபதம் ராமாயணத்தின் சாயலையும் பொன்னியின் செல்வன் மகாபாரதத்தின் சாயலையும் கொண்டது. பொன்னியின் செல்வனில் அலக்ஸாண்டர் டூமாவின் The Three Musketteers, The Man in the Iron Mask போன்ற நாவல்களின் செல்வாக்கு உண்டு. 'இந்தியக் காவிய மரபின் சாயலை மேற்கத்திய சாகசக் கதைகளின் சித்தரிப்புடன் இணைத்துத் தன் புனைவுத் தளத்தை உருவாக்கினார்' என 'நவீனத் தமிழிலக்கிய அறிமுகத்தில்' எழுத்தாளர் ஜெயமோகன் குறிப்பிடுகிறார்.

கல்கியின் சிறுகதைகள் சிறுகதையின் வடிவ அமைதி பெறாத நீண்ட கதையுரைப்புகளாகவே உள்ளன. 'கல்கியினால் சிறுகதை தமிழ் மண்ணில் இரண்டறக் கலந்தது. அந்த அத்திவாரத்தின்மீதே சிறுகதை கட்டி எழுப்பப்பட்டு சிகரமும் அமைக்கப்பட்டது. அவ்வளர்ச்சியை ஏற்படுத்தியவர்கள் மணிக்கொடி குழுவினர்' என கார்த்திகேச சிவத்தம்பி குறிப்பிடுகிறார்.

நாட்டுடைமை

1999-ல் கல்கியின் நூற்றாண்டு விழாவை ஒட்டி தமிழக அரசு கல்கியின் படைப்புகள் அனைத்தையும் நாட்டுடைமை ஆக்கியது.




## வாழ்க்கைப் பதிவு

- கல்கியின் வாழ்க்கை வரலாற்றை சுந்தா (எம்.ஆர் மீனாட்சிசுந்தரம்) பொன்னியின் புதல்வர் என்ற பெயரில் எழுதியிருக்கிறார். இது கல்கி இதழில் தொடராக வெளிவந்தது.
- சாகித்ய அக்காதமிக்காக இரா மோகன் கல்கியின் வாழ்க்கை வரலாற்றை இந்திய இலக்கிய சிற்பிகள் வரிசையில் எழுதியிருக்கிறா[கல்கி (இந்திய இலக்கியச் சிற்பிகள்) - இரா.மோகன் - சாகித்திய அகாதெமி

## விவாதங்கள்

- 1936-ல் சுப்ரமணிய பாரதியார் இந்தியாவின் மகாகவிகளின் பட்டியலில் வரமாட்டார் என்று கல்கி கருத்து தெரிவித்தார். அதற்கு கு.ப

ராஜகோபாலன் போன்றவர்கள் மறுப்பு தெரிவித்தனர். பாரதி மகாகவி விவாதம் என இது அழைக்கப்படுகிறது. இக்கட்டுரைகளை 1936-ல் கண்ணன் என் கவி என்ற பெயரில் கு.ப. ராஜகோபாலன் தொகுத்து வெளியிட்டார். பாரதி மகாகவியா விவாதம்

- 1937-ல் கல்கியின் எழுத்துக்கள் வால்டர் ஸ்காட், அலக்ஸாண்டர் டூமாவின் நாவல்களை தழுவி எழுதியவை என்று புதுமைப்பித்தன் குற்றம்சாட்டினார் அதற்கு கல்கி மறுப்பு தெரிவித்தார். வெவ்வேறு இலக்கியவாதிகள் அதில் கருத்து தெரிவித்தனர். இது கல்கி - புதுமைப்பித்தன் தழுவல் விவாதம் என்ற பெயரில் அறியப்படுகிறது.
- 1939-ல் காந்தி ஆலயநுழைவுப் போராட்டம் அறிவித்தபோது காஞ்சி சங்கராச்சாரியார் சந்திரசேகர சரஸ்வதி எதிர்ப்பு தெரிவித்தார். அதற்கு கல்கி 'நீங்கள் ஒரு சாதியின் தலைவர்தான், ஜகத்குருவெல்லாம் அல்ல' என கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார். அவருடைய அந்த மறுப்பு விவாதமாக ஆகியது.

விக்கிமூலம்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%85%E0%AE%B2%E0%AF%88_%E0%AE%93%E0%AE%9A%E0%AF%88

**அலை ஓசை**

**ஆசிரியர் கல்கி**

அலை ஓசை அமரர் கல்கி **(1899-1954)** எழுதிய தமிழ் புதினமாகும்.

@@@@@@@@@@@@@@@@

விக்கிமூலம்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B5%E0%AE%95%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%9A%E0%AE%AA%E0%AE%A4%E0%AE%AE%E0%AF%8D

## சிவகாமியின் சபதம்

சிவகாமியின் சபதம், கல்கி எழுதிய புகழ் பெற்ற தமிழ் புதினமாகும். 12 வருடங்களாக கல்கி வார இதழில் தொடர்கதையாக வெளிவந்த இக்கதை பிறகே ஒரு புதினமாக வெளியிடப்பட்டது. முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் அரசாண்ட காலத்தில் நடைபெற்ற சம்பவங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்ட இப்புதினத்தில் முதலாம் நரசிம்ம பல்லவன் என்ற இளவரசன் முக்கிய இடம் வகிக்கிறார்.

## உள்ளடக்கம்

## ஆசிரியர்:கல்கி

https://ta.wikisource.org/wiki/%E0%AE%86%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D:%E0%AE%95%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF




கல்கி (செப்டம்பர் 9, 1899 - டிசம்பர் 5, 1954) புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர் ஆவார். இவர் இயற்பெயர் ரா. கிருஷ்ணமூர்த்தி. 35 சிறுகதைத் தொகுதிகள், புதினங்கள், கட்டுரைகள், பயணக்கட்டுரைகள் மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். எனினும், மிகச் சிறந்த சமூக மற்றும் வரலாற்றுப் புதினங்களை எழுதியதற்காக பரவலாக அறியப்படுகிறார். இவர் எழுதிய பொன்னியின் செல்வன் புதினம் மிகப் புகழ் பெற்றதாகும். தன் படைப்புகள் மூலம் இந்திய தேசிய விடுதலை போராட்டத்திற்கும் பங்களித்திருக்கிறார். தியாகபூமி புதினம் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது.

ஈண்டு >>> அவரது படைப்புகள் அனைத்தும் - புதினங்கள். சிறுகதைகள், பயண இலக்கியம் - தரப்பெற்றுள்ளன.

## ONE HUNDRED TAMILS OF THE 20TH CENTURY

### Kalki - R.Krishnamurthy
### 1899 - 1954



"...Kalki Krishnamurthy was a colossus striding the Tamil journalistic field at a time when much was expected from a new India. Those were euphoric times, though it all evaporated quickly. I have been and still am his admirer. His Ponniyin Selvan introduced the grandiose empire of the Cholas - though it appears somewhat exaggerated when I read it now. Nevertheless it was a need of the time..." *Nominated by C.Kumarabharathy, New Zealand*

"Kalki may be regarded as a pioneer in the field of historical novels in Thamizh literature. With his inimitable descriptive style reminiscent of the English author, Walter Scott, Kalki had a tremendous capacity to take the readers back into the point and time in history when the story is supposed to have taken place..."*Kalki in Thamizh Literature Through the Ages - Professor C.R.Krishnamurti*

"...Using the historical romance as a lens with which to examine erstwhile formulations of Tamil identity (Indian nationalist and colonial rhetoric; Dravidian political separatism and anti-Brahmanism; the tanitamil (separate Tamil) language purity and suya mariyatei (self-respect) movements; the resurgence of Saiva Siddhanta religious tenets; the advent of theosophy in Tamilnadu; and Tamil marumalarcci or cultural renaissance), I argue that Krsnamurti's novelistic writing sketched a cultural and political canvas against which competing and complementary ideals of a new regionalist consciousness could emerge, signalling a new kind of interventionist literature in the Tamil instance..." *Dwelling in Futures Past: Place, Region and Tamil Nation in Ra. Krsnamurti's Civakamiyin Capatam - Akhila Ramnarayan*


"One of the easiest questions in Indian literature would be: Which is the best historical novel written by an Indian?ï¿½ The answer is Sivakamiyin Sabatham (The oath of Sivakami), authored by Kalki Krishnamurthy. Serialised in the magazine founded and named after him, the novel had been praised all over for its authenticity, descriptive power, emotional appeal and characterisation..."*A novelist whose genius remains unmatched - V. Gangadhar, 1999*










கல்கி

https://tamilnation.org/hundredtamils/kalki




*Kalki - Selected Short Stories: English Translation

Twelve memorable stories by the legendary wordsmith of modern Tamil 'Kalki' R. Krishnamurthy, one of the pioneering giants of the Tamil press in the tumultuous times of the nationalist movement, was a versatile and prolific writer, inscribing the urgencies of his time in his fiction. This collection brings together the best of Kalki's short stories, which contain some of the most colourful and enduring characters and themes of Tamil popular fiction of the 1930s and '40s. There is in these stories the heady urgency of the freedom struggle, the piquant humour of the parodied Tamil gothic and devastating social satire. In her sensitive translations, Gowri Ramnarayan has succeeded in capturing the nuances of the gently mordant wit that made Kalki's stories the highlight of the magazines they were originally published in, creating for themselves a dedicated following that flourishes undiminished to this day. Coinciding with the centenary of Kalki's birth, this volume is a well-deserved tribute to a writer whose breadth of vision and genius imagined and served a new India.









## கல்கியின் புதினங்கள்

| | |
|---|---|
| **1930கள்** | கள்வனின் காதலி · தியாகபூமி |
| **1940கள்** | மகுடபதி · பார்த்திபன் கனவு · சிவகாமியின் சபதம் · அபலையின் கண்ணீர் · சோலைமலை இளவரசி · அலை ஓசை · வீணை பவானி |
| **1950கள்** | பொன்னியின் செல்வன் · தேவகியின் கணவன் · மோகினித்தீவு · பொய்மான் · புன்னைவனத்துப் புலி · அமரதாரா |

# புகழின் சிகரத்தை தொட்ட முதல் எழுத்தாளர் "கல்கி"

https://groups.google.com/g/mintamil/c/3mFTtwmaWd8



venkatachalam Dotthathri

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் எழுத்தாளர்களில் முடிசூடா மன்னராய் விளங்கியவர், "கல்கி". தமிழில் சரித்திரக் கதைகள் தோன்றுவதற்கு முன்னோடி.

"கல்கி"யின் இயற்பெயர் ரா.கிருஷ்ணமூர்த்தி. தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையை அடுத்துள்ள புத்தமங்கலத்தில் 1899_ம் ஆண்டு செப்டம்பர் 9_ந்தேதி பிறந்தார். பெற்றோர் ராமசாமி அய்யர் _ தையல்நாயகி.

புத்தமங்கலத்தில் ஆரம்பக் கல்வி பயின்றபின், திருச்சி ஈ.ஆர். உயர்நிலைப்பள்ளியிலும், தேசியக் கல்லூரியிலும் படிப்பைத் தொடர்ந்தார்.

1921_ம் ஆண்டில், காந்திஜி ஒத்துழையாமை இயக்கம் தொடங்கினார். நாட்டு விடுதலைப் போரில் பங்கு கொள்ள வேண்டு மென்று விரும்பிய கல்கி, படிப்பை விட்டு விட்டு, கரூரில் நாமக்கல் கவிஞர் தலைமையில் நடந்த கூட்டத்தில் தடையை மீறிப் பேசினார். போலீசார் அவரை கைது செய்து கோர்ட்டில் நிறுத்தினர். அவருக்கு 3 மாதம் கடுங்காவல் தண்டனை கிடைத்தது.

சிறையில் இருந்தபோது "விமலா" என்ற தமது முதல் நாவலை எழுதினார். இந்த நாவல் பிறகு "வ.ரா" நடத்திய "சுதந்திரன்" பத்திரிகையில் வெளியாகியது.

விடுதலையான பிறகு, திருச்சியில் உள்ள தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் குமாஸ்தாவாக வேலை பார்த்தார். அப்போது காங்கிரசுக்காக அவர் எழுதிய துண்டுப் பிரசுரங்களில் அவருடைய எழுத்துத்திறமை வெளியாகியது.

"கல்கி"யின் திறமையைத் தெரிந்து கொண்ட காங்கிரஸ் தலைவர் திருச்சி டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன், திரு.வி.க.வின் "நவசக்தி" பத்திரிகையில் சேரும்படி ஆலோசனை கூறி, சிபாரிசுக் கடிதம் கொடுத்தார். கல்கியின் எளிய இனிய தமிழ்நடை திரு.வி.க. வுக்குப் பிடித்துப் போக, உடனே துணை ஆசிரியர் பதவி கொடுத்தார்.

"நவசக்தி"யில் பணி புரிந்தபோது, கல்கியின் எழுத்துக்களில் மேலும் மெருகேறியது. "தேனீ" என்ற பெயரில் உலகச் செய்திகளை திரட்டிக் கொடுத்தார். முக்கிய மாநாடுகளுக்கு நவசக்தியின் சிறப்பு நிருபராகச் சென்று, நிகழ்ச்சிகளை தொகுத்து எழுதினார். இவை எல்லாம் திரு.வி.க.வின் பாராட்டைப் பெற்றன.

இந்த சமயத்தில் கல்கிக்கு திருமணம் நடைபெற்றது. மனைவி பெயர் ருக்மணி.1928 பிப்ரவரியில், "ஆனந்த விகடன்" பத்திரிகை எஸ்.எஸ். வாசன் நிர்வாகத்தில் வெளிவரத் தொடங்கியது.

பாரதியாரின் நண்பரான பரலி.சு. நெல்லையப்பர், கல்கியை வாசனிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி, "இவர் நவசக்தியில் பணிபுரிகிறார். எழுத்தாற்றல் மிக்கவர். இவருடைய எழுத்துக்கள் விகடனுக்கு மிகவும் பொருந்தும்" என்றார். கல்கியை, ஒரு கட்டுரை எழுதி அனுப்பும்படி வாசன் கேட்டுக்கொண்டார். "ஏட்டிக்குப்போட்டி" என்ற நகைச்சுவை கட்டுரையை "கல்கி" எழுதி அனுப்பினார். வரிக்கு வரி நகைச்சுவை இழைந்தோட எழுதப்பட்டிருந்த அக்கட்டுரையைப் படித்து, விழுந்து விழுந்து சிரித்தார் வாசன். தன் தாயாருக்கும் படித்துக்காட்டினார். அவர் ரசித்து மகிழ்ந்தார்.

"கல்கி" என்ற புனைப்பெயரில் கிருஷ்ணமூர்த்தி எழுதிய முதல் கட்டுரை இதுதான். தொடர்ந்து விகடனில் நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதலானார்.

இந்த சமயத்தில், திருச்செங்கோட்டில் "காந்தி ஆசிரமம்" நடத்திக்கொண்டிருந்த ராஜாஜி, "விமோசனம்" என்ற பெயரில் மதுவிலக்கு

பிரசாரத்துக்காக ஒரு பத்திரிகை நடத்தப்போவதாகத் தெரிவித்தார். "நவசக்தி"யில் பெரும்பாலும் மொழிபெயர்ப்பு வேலைகளையே கல்கி செய்ய வேண்டியிருந்தது. பல்சுவை கதை_ கட்டுரைகளை எழுத விரும்பிய கல்கி, திரு.வி.க.விடம் பிரியா விடை பெற்று, திருச்செங்கோடு சென்று "விமோசனம்" பத்திரிகையின் துணை ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

1930_ல் மகாத்மா காந்தி உப்பு சத்தியாக்கிரகம் தொடங்கினார். அதில் பங்கு கொண்ட ராஜாஜி, வேதாரண்யத்தில் உப்பு காய்ச்சி சிறை சென்றார். ராஜாஜியின் அனுமதியுடன், "விமோசன"த்தை நிறுத்திவிட்டு கோபிசெட்டிபாளையத்தில் தடையை மீறிப் பேசி `கல்கி' கைதானார். அவருக்கு 6 மாத சிறை தண்டனை விதிக்கப் பட்டது. தண்டனை முடிந்து வெளியே வந்த கல்கி, ஆனந்த விகடனின் பொறுப்பாசிரியர் ஆனார்.

"கல்கி"யின் எழுத்தாற்றலும், வாசனின் நிர்வாகத் திறமையும் சேர்ந்ததால் விகடனின் விற்பனை பல்லாயிரக்கணக்கில் உயர்ந்தது.

விகடனில் "கல்கி" எழுதிய முதல் தொடர்கதை "கள்வனின் காதலி" தமிழ்நாடெங்கும் கல்கியின் புகழைப் பரப்பியது. பிறகு திரைப்படத்திற்கென்றே கல்கி எழுதிய "தியாகபூமி" கதையை கே.சுப்பிரமணியம் படமாகத் தயாரிக்க, அந்த படத்தின் "ஸ்டில்" களுடன் விகடனில் "தியாகபூமி" தொடராக வெளிவந்தது.

புதுமையான அந்த முயற்சி, விகடனின் விற்பனையையும், கல்கியின் புகழையும் சிகரத்துக்கு கொண்டு போயிற்று.

அதுமட்டுமல்ல, "கர்நாடகம்" என்ற பெயரில் எழுதிய சினிமா விமர்சனங்களும், தலையங்கங்களும் விகடனை தமிழகத்தின் குடும்பப் பத்திரிகையாக்கின. இந்த நேரத்தில் கல்கி வாழ்க்கையிலும், விகடன் வரலாற்றிலும் எதிர்பாராத ஒரு திருப்பம்.

1940_ம் ஆண்டின் இறுதியில் தனிநபர் சத்தியாக்கிரகத்தை காந்தி தொடங்கினார். அதில் கலந்து கொள்ள விரும்புவதாக மகாத்மா காந்திக்கு கல்கி கடிதம் எழுதி, அதற்கு அனுமதியும் பெற்றார்.

இதை வாசனிடம் கல்கி தெரிவித்தபோது "காந்திஜியிடம் உங்கள் பெயரைக் கொடுத்தபோது, அதை என்னிடம் தெரிவித்திருக்க வேண்டும்" என்றார் வாசன். போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் தொடர்புடைய பத்திரிகைகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்த காலம் அது.

எனவே, போராட்டத்தில் இருந்து கல்கி விலகியிருக்கவேண்டும்; அல்லது ராஜினாமா செய்து விட்டுப் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று வாசன் கருதினார். அதன் விளைவாக பதவியை ராஜினாமா செய்துவிட்டு, கல்கி போராட்டத்தில் பங்கு கொண்டார். 3 மாதம் கடுங்காவல் தண்டனை அடைந்தார்.

சிறையில் இருந்து விடுதலையான "கல்கி", தன் நண்பர் டி.சதா சிவத்துடன் சேர்ந்து, சொந்தப் பத்திரிகை நடத்தத் தீர்மானித்தார். காங்கிரஸ் போராட்டங்களில் கலந்து கொண்டபோதே கல்கியும், சதாசிவமும் நண்பர்கள். ஆனந்த விகடன் விளம்பர மானேஜராக 3 ஆண்டு பணியாற்றினார் சதாசிவம். பின்னர் சுயேச்சையான விளம்பர ஆலோசகராக இருந்தார்.

சங்கீத உலகில் புகழ் பெற்றிருந்த தன் மனைவி எம்.எஸ்.சுப்பு லட்சுமியை திரை உலகிலும் பிரகாசிக்கச் செய்ய "சகுந்தலை" படத்தை சதாசிவம் எடுத்தார். அடுத்து "சாவித்திரி" படத்தில் நடிக்க சுப்புலட்சுமிக்கு அழைப்பு வந்தது. ஆண் வேடத்தில் நடிக்க முடியாது என்று சுப்புலட்சுமி மறுத்துவிட்டார். ஆனால், "கல்கி" பத்திரிகையை தொடங்க பணம் தேவைப்பட்டதால், "சாவித்திரி" படத்தில் நடிக்க சம்மதித்து, அதில் கிடைத்த பணத்தைக் கொடுத்து உதவினார்.

சொந்தப் பத்திரிகை ஆரம்பிப்பதால் கல்கிக்கு கஷ்டங்கள் ஏற்படலாம் என்று ராஜாஜியும், ரசிகமணி டி.கே.சி.யும் கவலை அடைந்தனர். ஆனால் பத்திரிகை வெற்றிகரமாக அமைந்தது. கல்கியின் எழுத்துத் திறமையும், டி.சதாசிவத்தின் நிர்வாகத்திறனும் சேர்ந்து, "கல்கி"யின் விற்பனையை வெகு விரைவில் பல்லாயிரக்கணக்கில் உயரச்செய்தன.

தமிழின் முதல் சரித்திர நாவலான "பார்த்திபன் கனவு" கல்கியில் தொடராக வெளியாயிற்று. அதனை அடுத்து வெளிவந்த "சிவகாமியின் சபதம்" கல்கிக்கு இணையற்ற புகழைத் தேடித்தந்தது.

சுதந்திரப் போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு கல்கி தீட்டிய "அலை ஓசை", அவருடைய சமூக நாவல்களில் புகழ் பெற்றது. தமது படைப்புகளில் இதுவே தலைசிறந்தது என்பது கல்கியின் கருத்து.

1952_53_ல் கல்கி எழுதத்தொடங்கிய "பொன்னியின் செல்வன்" மூன்றாண்டுகள் தொடராக வெளிவந்தது. கதையின் முடிவு பலருக்கு திருப்தி அளிக்கவில்லை என்று குறிப்பிட்டு, கதாபாத்திரங்கள் பின்னர் என்ன ஆனார்கள் என்பதற்கு ஒரு முடிவுரையே எழுதினார், கல்கி. அத்தகைய நாவல், பின்னர் வாசகர்களின் பேராதரவைப் பெற்று "கல்கி"யில் பலமுறை மறு பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

கிட்டத்தட்ட 30 ஆண்டு காலம் தன் பேனா மூலம் இலக்கிய உலகத்தை அரசாண்ட கல்கி, 1954 டிசம்பர் 5_ந்தேதி, தமது 55_வது வயதில் காலமானார்.

அப்போது அவர் "கல்கி"யில் "அமரதாரா" என்ற தொடர் கதையை எழுதிக் கொண்டிருந்தார். அவர் எழுதி வைத்திருந்த குறிப்புகளைக்கொண்டு, கதையை கல்கியின் மகள் ஆனந்தி எழுதி முடித்தார்.மகன் ராஜேந்திரன் பின்னர் கல்கி ஆசிரியராகப் பொறுப் பேற்றார். இப்போது, பேத்தி சீதா ஆசிரியராக இருக்கிறார்.

"கல்கி"யின் நூற்றாண்டு விழா, தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் பெருமை கொள்ளும் வகையில் ஓராண்டு காலம் கொண்டாடப்பட்டு, 9_9_1999_ல் நிறைவடைந்தது. அப்போது கல்கி உருவம் பொறித்த தபால் தலை வெளியிடப்பட்டது. அடையாறு காந்தி நகரில் கல்கி வசித்த தெருவுக்கு அவர் பெயரைச் சூட்டினார், முதல்_அமைச்சர் கருணாநிதி.

# சிறுகதைகள் : கல்கி

https://www.sirukathaigal.com/%E0%AE%95%E0%AE%A4%E0%AF%88%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D/%E0%AE%95%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF/

கல்கி (செப்டம்பர் 9, 1899 – டிசம்பர் 5, 1954) புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர் ஆவார். இவர் இயற்பெயர் ரா. கிருஷ்ணமூர்த்தி. 35 சிறுகதைத் தொகுதிகள், புதினங்கள், கட்டுரைகள், பயணக்கட்டுரைகள் மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். எனினும், மிகச் சிறந்த சமூக மற்றும் வரலாற்றுப் புதினங்களை எழுதியதற்காக பரவலாக அறியப்படுகிறார். இவர் எழுதிய பொன்னியின் செல்வன் புதினம் மிகப் புகழ் பெற்றதாகும். தன் படைப்புகள் மூலம் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் பங்களித்திருக்கிறார். தியாகபூமி புதினம் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது.

கல்கி அவர்கள் 1899-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் தேதி பழைய சென்னை மாகாணத்தில் ஒன்றிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை அருகே அமைந்த புட்டமங்களம் எனும் ஊரில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். ஆரம்பப்பள்ளிப் படிப்பைத் தனது கிராமத்தில் முடித்த பிறகு அவர் திருச்சியில் உள்ள தேசிய உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். 1921-ல் மகாத்மா காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவங்கிய போது, அவரது கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு கல்கி தனது பள்ளிப்படிப்பைப் பாதியில் துறந்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். 1922-ல் சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்றதற்காக ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார். 1923-ல் அவர் நவசக்தி என்னும் பத்திரிக்கையின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். அவருடைய முதல் புத்தகம் ஏட்டிக்குப் போட்டி 1927-ல் வெளியானது.

'கல்கி'யின் படைப்புகள் நாட்டுடைமை ஆகிவிட்டமையால், அவருடைய பல படைப்புகள் இணையத்தில் பல தளங்களில் கிடைக்கின்றன.

## படைப்புகள்

### புதினங்கள்

- கள்வனின் காதலி (1937)
- தியாகபூமி (1938-1939)
- மகுடபதி (1942)
- அபலையின் கண்ணீர் (1947)
- சோலைமலை இளவரசி (1947)
- அலை ஓசை (1948)
- தேவகியின் கணவன் (1950)
- மோகினித்தீவு (1950)
- பொய்மான் கரடு (1951)
- புன்னைவனத்துப் புலி (1952)
- அமரதாரா (1954)

**வரலாற்று புதினங்கள்**

- பார்த்திபன் கனவு (1941 – 1943)
- சிவகாமியின் சபதம் (1944 – 1946)
- பொன்னியின் செல்வன் (1951 – 1954)

**சிறுகதைகள்**

1. சுபத்திரையின் சகோதரன்
2. ஒற்றை ரோஜா
3. தீப்பிடித்த குடிசைகள்
4. புது ஓவர்சியர்
5. வஸ்தாது வேணு
6. அமர வாழ்வு
7. சுண்டுவின் சந்நியாசம்
8. திருடன் மகன் திருடன்
9. இமயமலை எங்கள் மலை
10. பொங்குமாங்கடல்
11. மாஸ்டர் மெதுவடை
12. புஷ்பப் பல்லக்கு
13. பிரபல நட்சத்திரம்
14. பித்தளை ஒட்டியாணம்
15. அருணாசலத்தின் அலுவல்
16. பரிசல் துறை
17. ஸுசீலா எம். ஏ.
18. கமலாவின் கல்யாணம்
19. கற்கொலை

**இரா. கிருஷ்ணமூர்த்தி**

**R. Krishnamoorthy**




**1999 இல் இந்திய அரசு வெளியிட்ட அஞ்சல் தலையில் கல்கி இரா. கிருஷ்ணமூர்த்தி**

| | |
|---|---|
| **பிறப்பு** | இரா. கிருஷ்ணமூர்த்தி<br>செப்டம்பர் 9, 1899<br>புத்தமங்கலம்,<br>மயிலாடுதுறை மணல்மேடு அருகே, தமிழ்நாடு |
| **இறப்பு** | திசம்பர் 5, 1954 (அகவை 55)<br>சென்னை, இந்தியா |
| **புனைபெயர்** | கல்கி |
| **தொழில்** | செய்தியாளர், விமரிசகர், எழுத்தாளர் |
| **தேசியம்** | இந்தியர் |
| **கல்வி** | உயர் வகுப்பு |
| **கல்வி நிலையம்** | தேசிய உயர்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி |
| **காலம்** | 1921-1954 |
| **வகை** | வரலாற்றுப் புதினம், சமூகப் புதினம்,<br>கட்டுரைகள் |
| **குறிப்பிடத்தக்க படைப்புகள்** | *பொன்னியின் செல்வன்*, *சிவகாமியின் சபதம்* |
| **குறிப்பிடத்தக்க விருதுகள்** | *சாகித்திய அகாதமி விருது* (*அலை ஓசை*) |
| **பிள்ளைகள்** | கி. ராஜேந்திரன்<br>ஆனந்தி இராமச்சந்திரன் |

https://kalkionline.com/topic/amarar-kalki

**Amarar Kalki**

***அமரர் கல்கி (ரா. கிருஷ்ணமூர்த்தி) ஒரு புகழ்பெற்ற தமிழ்ப் புதின எழுத்தாளர். இவர் "பொன்னியின் செல்வன்", "சிவகாமியின் சபதம்" போன்ற வரலாற்றுப் புதினங்களுக்காகப் பெரிதும் அறியப்படுகிறார். சுதந்திரப் போராட்ட வீரராகவும், பத்திரிகையாளராகவும் திகழ்ந்த கல்கி, தனது எழுத்துக்களால் தமிழ் இலக்கிய உலகில் **நீங்கா இடம்பிடித்தவர்.***

# ரா. கிருஷ்ணமூர்த்தி – கல்கி (1899 – 1951)

https://saravanakumarmca.wordpress.com/2017/08/17/%E0%AE%B0%E0%AE%BE-%E0%AE%95%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B7%E0%AF%8D%E0%AE%A3%E0%AE%AE%E0%AF%82%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF-%E0%AE%95%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%95/

**ரா. கிருஷ்ணமூர்த்தி – கல்கி (1899 – 1951)**

## (Kalki Krishnamurthy)

தஞ்சை மாவட்டத்தில் தோன்றிய "கல்கி" தமிழ் இலக்கியத்தில் தமக்கெனத் தனி இடம் அமைத்துக் கொண்டவர். தமிழ்மொழியில் புதினத்துறைக்கு வித்திட்டவர் இவரேயெனலாம். நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர். திரு.வி.க. விடம் பயிற்சி பெற்றவர்; "கல்கி" இதழின் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். சமூக, வரலாற்றுப் புதினங்களையும் கணக்கற்ற சிறு கதைகளையும், கற்போர் உள்ளத்தைக் கவர்கின்ற கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் போன்ற புதினங்கள் இவர்தம் புகழை இறவாத் தன்மைத்தாக ஆக்குகின்றன.

கல்கி அவர்கள் 1899-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் தேதி தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள புட்டமங்கலம் என்னும் ஊரில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். ஆரம்பப்பள்ளிப் படிப்பைத் தனது கிராமத்தில் முடித்த பிறகு அவர் திருச்சியில் உள்ள தேசிய உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். 1921-ல் மகாத்மா காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவங்கிய போது, அவரது கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு கல்கி தனது பள்ளிப்படிப்பைப் பாதியில் துறந்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில்

சேர்ந்தார். 1922-ல் சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்றதற்காக ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார். 1923-ல் அவர் நவசக்தி என்னும் பத்திரிக்கையின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். அவருடைய முதல் புத்தகம் 1927-ல் வெளியானது.

சமஸ்கிருதமும் தியாகராஜரின் தெலுங்கு கீர்த்தனைகளும் பிரபலமாக இருந்து வந்த அக்காலக்கட்டத்தில் தமிழிசைக்காக கல்கி சதாசிவம் மற்றும் எம். எஸ். சுப்புலட்சுமியுடன் இணைந்து பாடுபட்டார் கல்கி. தமிழ் இசை குறித்த கல்கியின் சிந்தனைகளை "தரம் குறையுமா" எனும் புத்தக வடிவில் வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

**கல்கி எழுதிய புதினங்கள்:**

கள்வனின் காதலி
தியாகபூமி
மகுடபதி
பார்த்திபன் கனவு
சிவகாமியின் சபதம்
அபலையின் கண்ணீர்
சோலைமலை இளவரசி
அலை ஓசை
பொன்னியின் செல்வன்
தேவகியின் கணவன்
மோகினித்தீவு
பொய்மான் கரடு
புன்னைவனத்துப் புலி
அமர தாரா

இராமலட்சுமணர்களையும் வானரங்களையும் இலங்கைக்கு வரும்படியாக விட்டுவிட்டு, அப்புறம் இராவணன் திண்டாடிய கதையை நாம் அறிந்திருக்கிறோம். இராவணனுக்குத் தலை பத்து இருந்ததேயொழிய, ஒரு தலைக்கு இருக்க வேண்டிய புத்திகூடக்கிடையாது என்பதற்கு இதைக் காட்டிலும் அத்தாட்சி வேண்டியதில்லை. பிற்காலத்திலே இலங்கையை ஜயித்த வெள்ளைக் காரர்களுக்கு இருந்த புத்தியில் அரைவாசியாவது அவனுக்கு இருந்திருந்தால் என்ன செய்திருப்பான்? மண்டபத்தில் ஒரு "காம்ப்" ஏற்படுத்தி இலங்கைக்குள் வருகிறவர்கள் எல்லாம் செய்திருப்பான் அம்மை குத்திக் கொண்டுதான் வர வேண்டும் என்று ஏற்பாடு செய்திருப்பான். அம்மை குத்திக் கொள்வதற்குப் பயந்து கொண்டே இராம லட்சுமணர்களும் வானரங்களும் திரும்பிப்போய் இருக்கமாட்டார்களா?

– " கல்கி"

https://www.vikatan.com/literature/arts/former-madras-hc-judge-chandru-talks-about-writer-kalkis-biography-in-english

# ஆங்கிலத்தில் எழுத்தாளர் கல்கியின் வரலாறு... இந்தத் தலைமுறைக்கு ஏன் அவசியமானது? - சந்துரு விளக்கம்

சு. அருண் பிரசாத்இரா. மா. அடலேறு

**“ஆங்கிலத்தில் வெளியாகியிருக்கும் கல்கியின் வாழ்க்கை வரலாற்று நூல், கல்கியை மற்ற இந்திய மொழிகளிலும், உலகெங்கும் கொண்டு செல்ல வழிவகுத்திருக்கிறது.”**




Kalki Krishnamurthy: his life and times

தமிழின் புகழ்பெற்ற பத்திரிகையாளரும், எழுத்தாளருமான கல்கியின் வாழ்க்கை வரலாற்று நூல் சுந்தா எம்.ஆர்.எம் சுந்தரம் எழுதிய ‘பொன்னியின் புதல்வர்’. 1975-ல்

வெளியான, கல்கியின் பல பரிமாணங்களைப் பதிவு செய்திருக்கும் 912 பக்கங்கள் கொண்ட இந்நூல், தமிழில் வாழ்க்கை வரலாற்று நூல்களுக்கு முன்னுதாரணங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

புகழ்பெற்ற இந்த வாழ்க்கை வரலாற்று நூலைப் பத்திரிகையாளரும், கல்கியின் பேத்தியுமான கௌரி ராம்நாராயன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். Kalki Biography Project மூலம் ‘Kalki Krishnamurthy: his life and times’ என்ற பெயரில் இரண்டு பாகங்களாக இந்த மொழிபெயர்ப்பு வெளியாகியிருக்கிறது. கடந்த சனிக்கிழமை சென்னை பொருளியல் நிறுவனத்தில் சென்னை இன்டர்நேஷனல் சென்டர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில், சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி சந்துரு நூலை வெளியிட, மூத்த பத்திரிகையாளர் மாலன் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

நூலை வெளியிட்டுப் பேசிய முன்னாள் நீதிபதி சந்துரு, “ஒரு பத்திரிகையாளர் எப்படி இயங்க வேண்டும் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் கல்கிதான். அவர் வாழ்ந்த காலகட்டத்தில் மிகப் பெரிய சக்திகளை அவர் பத்திரிகையாளராக எதிர்கொண்டார். அவர் தன்னுடைய அரசியல் சார்புகளை மறைத்ததில்லை; ஆனால், தன்னுடைய இதழியலை அவை பாதிக்காமல் இயங்கினார். எழுத்தைத் தாண்டி, இசை, நடனம் எனப் பல்துறைகளில் கல்கியின் பங்களிப்பு விரிகிறது.

திரைப்படம் எல்லா கலை வடிவங்களை மீறிவிடும் என்று அவருக்குத் தெரிந்திருந்தது. இன்றைய இளம் தலைமுறையினருக்குக் கடந்த நூற்றாண்டில் என்ன நடந்ததென்றே தெரியவில்லை; குறிப்பாக, கடந்த நூற்றாண்டின் முதல் பாதி குறித்த எந்த அறிதலும் இல்லை. தமிழில் எது எழுதப்பட்டாலும் அது ஆங்கிலத்தில் கிடைக்கிறதா என்பதே அவர்களின் கேள்வியாக இருக்கிறது. இந்தப் பின்னணியில் வெளியாகியிருக்கும் கௌரியின் இந்த மொழிபெயர்ப்பு நூல், இன்றைய தலைமுறையினரில் ஆங்கிலம் மட்டுமே தெரிந்தவர்களுக்குக் கடந்த நூற்றாண்டைப் பற்றிய புரிதலைக் கொடுக்கும்; மேலும், கடந்த தலைமுறைக்கும் இந்தத் தலைமுறைக்குமான பாலமாகவும் இந்த நூல் இருக்கும்” என்றார்.

பத்திரிகையாளர் மாலன் பேசும்போது, “வாழ்க்கை வரலாறு எழுதுவது என்பது சவாலானது. ஒருவர் வாழ்க்கையில் நிகழ்ந்தவற்றைச் காலவரிசைப்படி தொகுப்பது வாழ்க்கை வரலாறு ஆகாது. வாழ்க்கை வரலாறு எழுதுபவர்களுக்கு வரலாறு சார்ந்த புரிதலும், ஆய்வுக்கான மனநிலையும், தகவல்களைக் கோர்த்து புனைவிலிருந்து உண்மையைப் பிரித்துப் பார்க்கும் பார்வையும் இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, வாழ்க்கை வரலாறு எழுதப்படும் நபரின் ஆளுமையைப் புரிந்திருக்க வேண்டும். அந்த வகையில் சுந்தா மிகச் சிறந்த வாழ்க்கை வரலாற்று நூலை கல்கிக்கு எழுதியிருக்கிறார் - கௌரி ராம்நாராயணனின் மொழிபெயர்ப்பு அதற்கு இணையாக வந்திருக்கிறது. ஆங்கிலத்தில் வெளியாகியிருக்கும் கல்கியின் வாழ்க்கை வரலாற்று நூல், கல்கியை மற்ற இந்திய மொழிகளிலும், உலகெங்கும் கொண்டு செல்ல வழிவகுத்திருக்கிறது” என்றார்.

***நூலை மொழிபெயர்த்த அனுபவங்களை கௌரி ராம்நாராயண் பகிர்ந்துகொள்ள, நாடகக் கலைஞர்கள் வி.பாலகிருஷ்ணனும் யோஹான் சாக்கோவும் மொழிபெயர்ப்பு நூலின் பகுதிகளை வாசித்தனர்.***



**கௌரி ராம்நாராயண்**

**கல்கி எழுதிய ‘காற்றினிலே வரும் கீதம்’ பாடலைக் கர்னாடக இசைப் பாடகர் சிக்கில் குருச்சரண் பாடுவதுடன் தொடங்கிய நிகழ்வு, மீண்டும் அவருடைய பாடலிலேயே நிறைவுபெற்றது.**

# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# TAMIL VIRTUAL ACADEMY

https://www.tamilvu.org/ta/courses-degree-p203-p2033-html-p2033332-30203



முனைவர். அ. தேவகி

**கல்கியின் சிறுகதைகளில் கருப்பொருள்**

இப்பகுதியில் படைப்பாளர் கல்கியின் சிறுகதைகளில் கருப்பொருள் அமைந்துள்ள விதத்தைப் பற்றிக் காண்போம்.

- **படைப்பாளர் வரலாறு**

கிருஷ்ணமூர்த்தி என்கின்ற கல்கி 09.09.1899இல் மயிலாடுதுறையை அடுத்த புத்தமங்கலத்தில் பிறந்தார் மயிலாடுதுறைப் பள்ளியிலும், திருச்சியிலும் கல்வி கற்றார் திருச்சியில் பள்ளியில் படிக்கும்போது படிப்பைப் பாதியில் விட்டுவிட்டுச் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டார் இவர் சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டு 1922ஆம் ஆண்டில் முதல்முறையும், 1930ஆம் ஆண்டில் இரண்டாம் முறையும், 1941ஆம் ஆண்டில் மூன்றாம் முறையும் சிறை சென்றார். சிறையிலிருந்து விடுதலையானதும் திரு.வி.க. நடத்தி வந்த **நவசக்தி** பத்திரிகையில் சேர்ந்தார். திருமணம் 1924இல் நடந்தேறியது. மனைவி பெயர் ருக்மணி. ராஜாஜி திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் இருந்து நடத்திய **விமர்சனம்** என்ற பத்திரிக்கையில் இவர் உதவியாசிரியராக இருந்தார். எஸ்.எஸ் வாசனின் ஆனந்த விகடனில் துணை ஆசிரியராக 1932இல் பணியாற்றினார். பின் **ஆனந்த விகடனிலிருந்து** விலகி, நண்பர் சதாசிவத்தோடு சேர்ந்து 1941இல் **கல்கி** இதழைத் தொடங்கினார் அன்று முதல் இவர் கல்கி கிருஷ்ணமூர்த்தியானார்.

திரு.வி.க.வின் **நவசக்தி**யில் பணியாற்றும்போது எழுத்துத்திறனை வளர்த்துக் கொண்டார்; ஒரு இதழைத் தொடங்கி

நடத்துவதற்குரிய பயிற்சியையும் பெற்றார். இதில், திரு.வி.க உறுதுணையாக நின்றார். அவரை நினைவு கொள்ளும் வகையில் கல்கி எனும் புனைபெயரைச் சூட்டிக் கொண்டார். திரு.வி.க.வின் பெயரில் உள்ள முதல் இரண்டு எழுத்துகளும், கிருஷ்ணமூர்த்தி எனும் பெயரில் உள்ள முதல் எழுத்தும் இணைந்து உருவானதே கல்கி என்ற புனைபெயர். பின்னர் இதுவே நிலைத்து விட்டது.

- **இவரது படைப்புகள்**
    - சாரதையின் தந்திரம் - சிறுகதைத் தொகுப்பு - 1927
    - ஆனந்த விகடனில் முதல் தொடர் - கள்வனின் காதலி - 1937
    - பார்த்திபன் கனவு - தொடர் - 1941-43
    - சிவகாமியின் சபதம் - தொடர் - 1944-46
    - அலை ஓசை - தொடர் - 1948-49
    - பொன்னியின் செல்வன் - தொடர் - 1950-54
    - முதல் திரைக்கதை - தியாகபூமி - 1939
    - மீரா - திரைப்படம் - 1945
    - கள்வனின் காதலி - திரைப்படம் - 1955

கர்நாடகம், தமிழ்மகன், விவசாயி, தமிழ்த்தேனீ, ராது, அகஸ்தியன் ஆகிய புனைபெயர்களிலும் இவரது படைப்புகள் வெளிவந்தன. இவர் 1954ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் தேதி சென்னையில் காலமானார். **1956ஆம்** ஆண்டு சாகித்திய அகாதமி விருது இவருடைய மறைவிற்குப் பிறகு இவரது **'அலைஓசை'** நாவலுக்கு வழங்கப்பட்டது.

- **கதைகளில் கருப்பொருள்**

நடந்த சம்பவத்தையோ அல்லது நடக்காத சம்பவத்தையோ பிறர் ஆவலைத் தூண்டும்படி சொன்னால் அது கதையாகிறது என்கிறார் இந்தப் படைப்பாளர். இவ்வகைப்பட்ட கதைகளை நான்கு வகையில் அடக்குகிறார்.

- **கட்டுக்கதைகள் அல்லது பொய்க்கதைகள்**

  நடக்காத கதைகளை நடந்ததாக எண்ணி ஆவலுடன் கேட்பது.

- **வேடிக்கைக் கதைகள்**

இவை வெறும் கற்பனைக் கதைகள். வேடிக்கைக்காக இக்கதைகள் கேட்டு அனுபவிக்கப்படுகின்றன.

- **காவிய ரசமுள்ள கதைகள்**

இவை மனித இனத்தின் வீரம், சோகம், காதல், நகைச்சுவை முதலிய நவரசங்களை வெளிப்படுத்தக் கூடிய வகையில் எழுந்தவையாகும்.

- **கருத்து அமைந்த கதைகள்**

இவை சமூக முன்னேற்றம், தேச முன்னேற்றத்தை நினைவில் கொண்டு, உயர்ந்த நோக்கங்களைப் பரப்புவதற்காக எழுந்த கதைகளாகும்.

கல்கி அவர்களின் சிறுகதைகள் நவரசங்களை வெளிப்படுத்துகின்ற கருப்பொருள்களைக் கொண்டு உருப்பெற்றுள்ளன. இவற்றிற்கு அடிப்படையாக, குடும்ப முன்னேற்றம், சமூக முன்னேற்றம், தேசிய முன்னேற்றம் ஆகியவை அமைந்துள்ளன. வாழ்க்கைப்பயன், சமூகப்பயன் விளைவிக்கும் இவரது சிறுகதையின் கருப்பொருள் குறிப்பிடத்தக்கதாகிறது. நம் பாடப் பகுதிக்கு உரியதாகக் **'கேதாரியின் தாயார்'** சிறுகதை இடம் பெறுகிறது. இதன் கருப்பொருள், வாழ்க்கைப்பயன், சமூகப்பயன் ஆகியவை விளக்கப்படுகின்றன.

**'கேதாரியின் தாயார்' சிறுகதையின் கதைப்பொருள்**

கேதாரியின் நண்பன் இக்கதையைக் கூறுவதுபோல் படைப்பாளர் அமைத்துள்ளார். இக்கதை சோகத்திற்கு இடம் கொடுப்பதாயுள்ளது. சமூகத்தைப் பிடித்திருக்கும் பல நோய்களில் ஒன்றாக இச்சிறுகதையின் கருப்பொருள் அமைந்துள்ளது. இக்கதை சற்று நீண்ட சிறுகதையாய் அமைந்துள்ளது.

"கேதாரியின் தந்தை அவன் மூன்று வயதாக இருக்கும்போதே ஒரு நாடகக்காரியின் மையலில் சிக்கி வீட்டை விட்டுப் போய்விட்டார். அதனால் கேதாரிக்கு அவன் தந்தையைப் பற்றிய ஞாபகமே கிடையாது. கேதாரிக்குத் திருமணப் பேச்சு நடந்தபொழுது தான் இது எல்லோருக்கும் தெரிய வந்தது. பெண்ணைப்

போய்ப் பார்க்கச்சொல்லிப் பாகீரதி அம்மாமி எவ்வளவு வற்புறுத்திய போதிலும், 'நீ பார்த்து நிச்சயம் செய்தால் சரிதான் அம்மா. ஒரு மூளிப்பெண்ணைக் கலியாணம் பண்ணிக் கொள்ளச் சொன்னாலும் பண்ணிக் கொள்கிறேன்' என்றான் கேதாரி (**மூளிப்பெண்** - குறையுடைய அல்லது அழகற்ற பெண்). ஆனால் அம்மாமி, 'கேதாரி பெண்ணைப் பார்த்துப் பிடித்திருக்கிறது என்று சொன்னால்தான் நிச்சயம் பண்ணுவேன்' என்று கூறிவிட்டாள். அப்பொழுதுதான் கேதாரியின் தகப்பனாரைப் பற்றிக் கூறக் கேட்டேன்.

'இப்படியெல்லாம் பெண்ணையும், பிள்ளையையும் கேட்காமல் கல்யாணம் பண்ணித்தான் பல குடும்பங்களில் கஷ்டம் ஏற்படுகிறது. கேதாரியின் தகப்பனார் என்னை விட்டு ஓடியதற்கு ஊரெல்லாம் அவரைத் திட்டித் தீர்த்தனர். எனக்கு அப்பொழுது கோபமும், ஆத்திரமும் வந்தது. நாற்பது நாள் படுத்த படுக்கையாகக் கிடந்தேன். பின்னர் ஆற அமர யோசித்துப் பார்த்ததில் அவர் மீது குற்றம் இல்லையென்று தோன்றியது. என்னைக் கல்யாணம் செய்து கொள்வதில் அவருக்கு இஷ்டமே இல்லையாம். இதைப் பெரியவர்களிடம் கூறவும் செய்தாராம். ஆனால் பெரியவர்கள் பலவந்தப்படுத்திக் கல்யாணம் செய்து வைத்துவிட்டனர். ஏதோ ஐந்தாறு வருடம் பல்லைக் கடித்துக்கொண்டு குடும்பம் நடத்தினோம். அப்புறம் கூத்தாடி வந்து சேர்ந்தாள். போய் விட்டார்' என்றாள்.

இதனிடையே நானும் அம்மாமியிடம் பல கேள்விகளைக் கேட்டுச் சில விவரங்களை அறிந்தேன். கேதாரியின் தகப்பனார் சுந்தரராமையர் பார்ப்பதற்கு ஆள் வாட்டசாட்டமாக நன்றாய் இருப்பாராம். நன்றாகப் பாடுவாராம். திருமங்கலத்தில் தபால் ஆபீஸில் எழுத்தர் வேலை பார்த்துக் கொண்டிருந்தாராம். கேதாரியின் தகப்பனாருக்கு நாடகம் என்றால் பித்து. ஒரு நாள் ராஜபார்ட் வேடம் போடுகிறவன் வராத காரணத்தால் இவர் வேடம் போட்டு நடித்துக் காண்பிக்க, நாடகக்காரி

ரங்கமணியும் நடிக்கச் சம்மதித்தாளாம். இப்படி வளர்ந்த அவர்களுடைய நெருக்கத்தைப் பற்றி ஊரில் உள்ளவர்கள் பேசிக்கொண்டபோது, அம்மாமி அதை நம்பவில்லையாம். கடைசியில் நாடகக் கம்பெனி ஊரை விட்டுப் போயிற்று. அதற்கு மறுநாள் சுந்தரராமையரையும் காணவில்லை. நாடகக் கம்பெனியுடன் இவரும் இலங்கைக்குப் போனது மட்டும் பின்னாளில் தெரிய வந்ததாம். அதன்பிறகு அவரைப் பற்றி ஒரு விவரமும் சரியாகத் தெரியவில்லையாம். பாகீரதி அம்மாமியும் அதற்கு மேல் அவரைப் பற்றி எண்ணுவதை விட்டு விட்டு, கேதாரி மீது அன்பைச் செலுத்த ஆரம்பித்தாள். சுந்தரராமையர் ஓடிப்போன செய்தியை அறிந்து அம்மாமியின் தாய் தந்தையர் அவளைக் கிராமத்திற்கு அழைத்துச் சென்றனர். அம்மாமியைத் தவிர அவர்களுக்கு வேறு பிள்ளை குட்டி கிடையாது. கேதாரி வளர்ந்ததும் அவனைப் படிக்க வைக்கும் பொருட்டுத் திருச்சிக்குக் குடிவந்தார்கள்.

அப்பொழுதுதான் எங்கள் எதிர்வீட்டிற்குக் குடிவந்த கேதாரியை நான் முதன் முதலில் பார்த்தேன். அந்தப் பையன் கையில் தங்கக் காப்புடன், தலையைப்பின்னிச் குல்லா வைத்துக்கொண்டு இருந்தான். அதை நான் வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றது என் நினைவிற்கு வருகிறது. அவனுடன் நான் முதல் தடவை பேசின உடனேயே எனக்குப் பிடித்துப் போயிற்று. ஓயாமல் 'அது என்ன? இது என்ன?' என்று கேட்டுக் கொண்டே இருப்பான். நானும் சலிக்காமல் பதில் சொல்லிக்கொண்டே இருப்பேன். நான் படித்த அதே பள்ளியில் அவனையும் சேர்க்க, நாங்கள் இணை பிரியாத நண்பர்கள் ஆனோம்.

அவர்கள் திருச்சிக்கு வந்த மூன்று வருடத்திற்குள் தாத்தா இறக்க, அவர்கள் கையிலிருந்த பணமெல்லாம் செலவழிந்தது. சாப்பாட்டுக்கு விளைந்து வரும் நெல் போதுமானதாக இருந்தது. கேதாரி நன்றாகப் படித்ததால் உதவித்தொகை கிடைத்தது. ஆனால் வாடகைக்கு மட்டும்

பணம் தேவைப்பட்டது. அம்மாமியும், பாட்டியும் அப்பளம் இட்டு விற்க ஆரம்பித்தனர். அம்மாமியை 'வாழாவெட்டி' என்று அக்கம்பக்கத்தவர்கள் அழைத்தாலும், என் தாயாரைக் காட்டிலும் அவர்கள் மீது எனக்குப் பிரியம் அதிகமாயிருந்தது. நானே அம்மாமியின் அப்பளங்களை ஏராளமாக விற்றுக் கொடுத்தேன். கொஞ்ச நாளில் பாட்டியும் இறந்து விட்டாள். கேதாரி தன் தாயார் பட்ட கஷ்டங்களுக்கு ஈடாக பி.ஏ. பரிட்சையில் சென்னையில் முதல்மாணவனாகத் தேறினான். கேதாரி காலேஜ் வகுப்புக்குப் போனபோதே பெண்ணைப் பெற்றவர்கள் கல்யாணப்பேச்சு எடுக்க அவன் பி.ஏ முடிக்கும் வரை எதுவும் பேசக்கூடாது என்று அம்மாமி கூறிவிட்டாள். இப்பொழுது கேதாரி பி.ஏ. தேறியவுடன் அவன் கல்லூரியின் பழைய மாணவர் மணிப்புரம் பண்ணையார் கேதாரியின் தகுதிகளைக் கேள்விப்பட்ட நிலையில் தன் பெண்ணைக் கொடுக்க முன் வந்தார். பெரிய சம்பந்தம் கிடைத்துவிட்டது என்று அம்மாமி பணம், பவுன் வேண்டுமென்று கேட்காமல், பையனைச் சீமைக்கு அனுப்பி ஐ.சி.எஸ் படிக்கவைக்க ஒப்புக் கொள்ள வேண்டும் என்றாள்.

அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் சிலர் அதிசயப்பட்டனர். சிலர் அம்மாமியை வைதார்கள். 'என்ன நெஞ்சழுத்தம் இவளுக்கு. ஒரு பிள்ளை, அதைச் சீமைக்கு அனுப்புகிறேன்
என்கிறாளே' என்றார்கள் (**வைதார்கள்** - திட்டினார்கள்; **சீமை** - வெளிநாடு). பண்ணையார் நரசிம்மய்யர் வைதிகப் பற்றுள்ளவர். முதலில் தயங்கி, பின்னர் சாஸ்திரி தீட்சிதர்களோடு கலந்தாலோசித்து சம்மதித்தார். இதன்பின்தான் கேதாரியை, பெண் பார்த்து விட்டு வரும்படி அம்மாமி அனுப்பியது. கேதாரி தன் தாயிடம் வைத்திருந்த நம்பிக்கை எவ்வளவு நியாயமானது என்று தோன்றிற்று. கிளி என்றால் கிளி. பெண் அவ்வளவு அழகாயிருந்தாள். பதின்மூன்று, பதினான்கு வயதிருக்கலாம். கல்யாணம் சிறப்பாக நடந்தது. அதன்பின்

இங்கிலாந்துக்குப் பயணமானான். பாகீரதி அம்மாமியைச் சம்பந்தி வீட்டினர் அவர்களுடனேயே தங்கச் சொல்லி எவ்வளவு வற்புறுத்தியும் மறுத்துவிட்டாள். அதன்பிறகு அவர்களின் கௌரவம் பாதிக்கப்படக்கூடாதென்று அப்பளம் இட்டு விற்பதை மட்டும் நிறுத்திக் கொண்டாள்.

கேதாரி சீமைக்குச் சென்று ஏழெட்டு மாதங்களுக்குப் பிறகு நரசிம்மய்யர் என்னைக் கூப்பிட்டனுப்ப, நான் சென்றேன். சுந்தரராமய்யரிடமிருந்து வந்த கடிதத்தைக் காட்டி, பணம் அனுப்பச் சொல்லி எழுதியிருக்கிறார். இது உண்மையா? என்று கேட்க, நான் அம்மாமியிடம் கேட்டு வருவதாகக் கூறிக் கடிதத்தை எடுத்துச் சென்றேன். அம்மாமி கையெழுத்தைப் பார்த்து விட்டு சற்றும் அதிர்ச்சியடையாமல் இது அவர் கையெழுத்து தான் என்றாள். பிறகு மௌனமாய் யோசனையில் ஆழ்ந்தாள். அம்மாமி, 'நரசிம்மய்யர் பணம் அனுப்புவதாகச் சொல்கிறார்' என்று கூற, உடனே மாமி, நான் அப்பளம் இட்டுச் சேர்த்த பணத்தில் மீதி இது. இந்த வீட்டு விலாசம் கொடுத்து இங்கேயே வந்து சேரும்படி எழுது என்றாள். அப்பொழுது அவள் குரல் கம்மியிருந்தது. அவ்வளவு தான். மற்றபடி எனக்குத் தான் கண்ணில் ஜலம் வந்தது. பத்து நாளைக்கெல்லாம் மணியார்டர் திரும்பி வந்து விட்டது. சுந்தரராமையர் காலமாகிவிட்டதாகவும், அநாதைப் பிரேதமாக அடக்கம் செய்யப்பட்டதாகவும் எழுதப்பட்டிருந்தது.

பதினெட்டு வருஷமாய்க் கண்ணால் காணாத புருஷனுக்காக, பாகீரதி அம்மாமி துக்கம் காத்தாள். பத்தாவது நாள் பிராமணச் சமூகத்திற்குரிய அலங்கோலங்கள் அம்மாமிக்கும் செய்யப்பட்டன. கேதாரிக்கு இதுபற்றி ஒன்றும் தெரிவிக்கக் கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாள். காலம் எப்படியோ சென்றது. எதிர்பார்த்தது போலவே கேதாரி சிறப்புடன் ஐ.சி.எஸ். தேறினான். நான் நடந்தவற்றையெல்லாம் அவன் அதிர்ச்சியடையா

வண்ணம் எழுதி, பம்பாய் வரும்போது அவனுக்குக் கிடைக்கும்படி ஒரு தபால் அனுப்பியிருந்தேன். ஆனால் அவனுக்கிருந்த அவசரத்தில் அவன் கப்பலிலிருந்து நேரே ரயிலுக்கு வந்துவிட்ட காரணத்தால் மேற்படி கடிதம் அவனுக்குச் சேரவில்லை. அவன் வரும் விவரத்தைத் தந்தியில் தெரிவித்திருந்த படியால், அந்த நாளன்று நான் வீட்டுவாசலில் தயாராய்க் காத்துக் கொண்டிருந்தேன்.

கேதாரி வந்தான். என் கழுத்தைக் கட்டிக்கொண்டு உள்ளே இழுத்துக் கொண்டு அவசரமாய்ச் சென்றான். தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்த அம்மாமியின் மீது அவன் பார்வை படவில்லையோ அல்லது அடையாளம் தெரியவில்லையோ நான் அறியேன். 'அம்மா! அம்மா!' என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே சென்றான். அம்மாமியின் கண்களில் கண்ணீர் வந்ததை நான் அப்பொழுது தான் முதன் முதலாகப் பார்த்தேன். 'அடே கேதாரி, என்னடா இது....... அம்மா இதோ இருக்கிறாள்... எங்கேயோ தேடிக் கொண்டு போகிறாயே' என்றேன். கேதாரி திரும்பி வந்தான். வெள்ளைப்புடவை அணிந்து மொட்டைத்தலையை முக்காடால் மூடிக்கொண்டிருந்த பாகீரதி அம்மாமியை உற்றுப்பார்த்தான். 'ஐயோ, அம்மா!' என்று பயங்கரமாக ஒரு கூச்சல் போட்டுவிட்டு, தொப்பென்று கீழே உட்கார்ந்தான். தலையைக் கைகளால் பிடித்துக் கொண்டான்.

கேதாரிக்கு அதுமுதல் கடுமையான சுரம். அவனுக்குச் சிகிச்சை செய்யாத டாக்டர் இல்லை. ஆனால் பயன்தான் ஒன்றுமில்லை. அவன் உடம்பைப் போலவே உள்ளமும் கொதித்துக் கொண்டிருந்தது. அவனுக்கு ஒரே நினைவு, ஒரே ஞாபகந்தான். 'சங்கரா! என்ன சாஸ்திரமடா அது? அநாதையாக விட்டுப் போய், பதினெட்டு வருடம் திரும்பி வராத புருஷன் செத்ததற்காக மொட்டையடிக்கச் சொல்லும் சாஸ்திரம். அதைக் கொண்டு வாடா தீயில் போட்டுக் கொளுத்துவோம். இதோ பார் சங்கர். என் தாயார் ரொம்பப் புத்திசாலி. இந்த முட்டாள்தனத்திற்கு ஒரு நாளும் உடன்பட்டிருக்க மாட்டாள். நான் பெரிய இடத்தில்

கல்யாணம் செய்து கொண்டேன் அல்லவா? அவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் பயந்துதான் அம்மா சம்மதித்திருக்க வேண்டும்' என்பான். 'சங்கரா! என் தாயாரின் முகத்தில் விழித்தால் சகல பீடைகளும் நீங்கும் என்பார்களே இப்பொழுது அவளும் அபசகுனந்தானே?' என்று புலம்பினான்.

எவ்வளவு சொல்லித் தேற்றினாலும் அவன் அந்தப் பேச்சை விடுவதாய் இல்லை. 'இதைக்கேள் சங்கர், உத்தியோகமும் ஆயிற்று; பணமும் ஆயிற்று. நான் மட்டும் பிழைத்து எழுந்தால் பிராமணப் பெண்கள் புருஷனை இழந்தால் மொட்டையடிக்க வேண்டும் என்ற வழக்கத்தை ஒழிக்க ஒரு பெரிய கிளர்ச்சியை நடத்தப் போகிறேன். இந்தத் தனிக் கௌரவம் நம் சாதிக்கு மட்டும் வேண்டாம்' என்றான். இந்நிலையில் கேதாரி குணமடையாமலே சீமையிலிருந்து வந்த 21 ஆம் நாள் காலமானான்.

இந்தப் பரிதாப வரலாற்றில் சொல்ல வேண்டியது ஒன்றே ஒன்றுதான் பாக்கியிருக்கிறது. கேதாரியின் மாமனார் அவனுடைய புகைப்படம் ஒன்றைக் கேட்டிருந்தபடியால் அதை நான் எடுத்துக்கொண்டு அவர் வீட்டிற்குச் சென்றேன். அப்பொழுது கேதாரியின் மனைவியைத் தற்செயலாகப் பார்க்க நேரிட்டது. அவளைப் பார்த்ததும் என் உடம்பு நடுங்கிற்று; மயிர் சிலிர்த்தது. 'கிளி' என்று சொன்னேன் அல்லவா? அந்தக் கிளிக்கு இப்பொழுது தலையை மொட்டையடித்து முக்காடும் போட்டிருந்தார்கள்". இத்துடன் கதை நிறைவடைகிறது.

- **கருப்பொருள்**

இக்கதையில் கருப்பொருள் ஆணித்தரமாய் அமைந்துள்ளது. கணவனை இழந்த பிராமணப் பெண்களுக்கு மொட்டையடிக்கும் பழக்கத்தை ஒழிக்க வேண்டும். இந்தச் சாதிக்கு மட்டுமான தனி வழக்கமாக இது இருக்கக் கூடாது என்பது வலியுறுத்தப்படுகிறது. இந்தச் சாதிப்பழக்க வழக்கத்தால் ஓர் உயிர்

இழப்பும், சமூகத்தினரின் மனக்குமுறலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 'கேதாரியின் தாயார்' சிறுகதையின் வாழ்க்கைப் பயன்

இச்சிறுகதையின் கதைமாந்தர்கள் பிறருக்குப் பயன்படக் கூடிய வாழ்க்கை வாழ்பவர்களாகக் காட்டப்படுகின்றனர். பாகீரதி அம்மாமி, கேதாரி, சங்கர், நரசிம்மய்யர் ஆகிய கதைமாந்தர்கள் வாழ்க்கைப் பாடம் கற்றுக்கொள்ள உதவுபவர்களாக உள்ளனர். சுந்தரராமையர் என்ற கதைமாந்தர் மூலம் பயனற்ற வாழ்க்கை அறியப்படுகிறது. குடும்ப, சமூக வாழ்வில் இத்தகைய மனிதர்களால் எவ்விதப் பயனும் விளைவதில்லை என்பது உணர்த்தப்படுகிறது. பின்வரும் அளவில் கதைமாந்தர்கள் மூலம் பெறப்படும் வாழ்க்கைப் பயனைக் காணலாம்.

- **பாகீரதி அம்மாமி**

இக்கதைப்பாத்திரம் மூலம் வாழ்க்கைப்பாடம் கற்பிக்கப்படுகிறது. வாழ்க்கையில் பல சிக்கல்களை எதிர்கொண்டு அதில் வெற்றிபெறும் பெண்ணாக இப்பாத்திரப் படைப்பு விளங்குகிறது. கணவன் தன்னை விட்டு ஓடிப்போன நிலையில் தன் வாழ்க்கை முடிந்துவிட்டதாகக் கருதாமல் மீண்டும் வாழ்க்கையைத் தொடங்குவது என்பது, பெண்களுக்குத் தன்னம்பிக்கை தேவை என்பதைக் காட்டுவதாக உள்ளது. மகனை நன்கு படிக்கவைக்க வேண்டும் என்ற அவளின் நோக்கம் எல்லோரும் பின்பற்ற வேண்டிய கருத்தாகிறது. தாய்க்குத் தாயாக, தந்தைக்குத் தந்தையாக இருந்து குடும்பத்தைக் காப்பாற்றும் பாகீரதி பிறருக்கு வழிகாட்டியாகவும் விளங்குகிறார். மகனுக்கு வரதட்சணை வாங்கிக் கொண்டு, திருமணம் செய்வித்து, அதில் இன்ப வாழ்வு வாழலாம் என்று கருதாமல் மேலும் மேலும் மகனை முன்னேற்ற வேண்டும் என்ற நிலையில் செயல்படும் பாகீரதி 'தாய்' என்னும் நிலைக்குப் பெருமை சேர்ப்பவராகிறார். பையனின் சம்மதத்தின் பேரிலேயே மணம் செய்விக்க முற்படுவது முற்போக்குச் சிந்தனையைக் காட்டுவதாக உள்ளது.

பதினெட்டு வருடங்கள் விட்டுப் பிரிந்த கணவனுக்காக, அவன் இறப்பிற்குப் பிறகு மனைவி என்ற முறையில், அதற்குரிய சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் போற்றுவது இப்பாத்திரத்தின் உயர்வை எடுத்துக்காட்டுகிறது. தன் கணவன்

சம்பந்தியிடம் பணம் கேட்டு எழுதியிருந்ததை அறிந்த அவள் தன்னை விட்டு ஓடிப்போன கணவனுக்கு ஏன் உதவ வேண்டும் என்று கருதாமல் உடனடியாகத் தானே பணம் அனுப்பி, தன் வீட்டிற்கே வரச்சொல்வது அவளது சுயமரியாதைக்குரிய வாழ்க்கையைக் காட்டுகிறது. சுயதொழில் செய்து மகனை ஐ.சி.எஸ் படிக்கும் நிலைக்கு ஆளாக்கும் பாகீரதியின் முயற்சி பிறர் பின்பற்ற வேண்டிய பாடமாகிறது. இங்ஙனம் பயன்பட வாழ்ந்த கதைமாந்தரின் மூலம் நாமும் பயனுடைய பாடம் கற்றுக்கொள்ள முடிகிறது.

- **கேதாரி**

அம்மாவை மட்டுமே பிறந்தது முதல் அறிந்தவன் என்ற அளவில் அவன் அம்மா மீது கொண்டிருக்கும் நம்பிக்கை, பாசம் அளவற்று இருப்பது தெரிகிறது. அம்மாவின் துயரத்திற்கு ஈடாக அவன் நன்கு படித்து, நல்லவனாக உருவாவது என்பது எல்லோரும் பின்பற்ற வேண்டிய ஒன்றாகிறது. அவன் படித்ததனால் ஏற்பட்ட சிந்தனையின் விளைவாக அர்த்தமற்ற சாத்திரங்களை முட்டாள்தனமாகக் கருதி வெறுக்கிறான். இப்படிப்பட்ட மூடப்பழக்கத்தை ஒழிக்க 'நான் கிளர்ச்சி செய்யப் போகிறேன்' என்று கூறுவதும், வாழ்க்கை மற்றும் சமூகப் பிரச்சனைக்குத் தீர்வுகாண விரும்புவதும் அவனுடைய உயர்ந்த மனப்போக்கினைக் காட்டுவதாயுள்ளன. அம்மாவுக்கு நிகழ்ந்த அலங்கோலத்தை எண்ணி எண்ணி மனநோய்க்கு ஆளாகி உயிரை விடுவதும், அடுத்து அவன் மனைவிக்கும் இத்தகைய அலங்கோலம் நிகழ்வதும் ஆகியவை சமூக அவலங்களாகக் காட்டப்பட்டு, சமூகச்சிக்கல் வெளிப்படுத்தப்படுகிறது.

- **சங்கர்**

இந்தக் கதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை எல்லோருக்கும் உதவக்கூடிய நல்ல மனம் கொண்ட கதைப்பாத்திரமாக இவர் விளங்குகிறார். இக்கதைப்பாத்திரம் மூலமே படைப்பாளர் தம் கருத்தைக் கதையாகக் கூறியுள்ளார். இளம் வயதில் தான் நன்றாகப் படிக்காவிட்டாலும், கேதாரி நன்றாகப் படிப்பதைப் பார்த்துப் பெருமை கொள்வது, அம்மாமிக்கு அப்பளம் விற்றுத்தர உதவுவது, ஊரே அம்மாமியை 'வாழாவெட்டி' என்று தூற்றியபோதிலும் அவன் தன் தாயை விட கேதாரியின் தாயை

உயர்வாகக் கருதுவது, அம்மாமியின் துயர வாழ்க்கையை எண்ணி வேதனைப்படுவது, அம்மாமியின் உழைப்பையும் மனவுறுதியையும் பார்த்து மலைத்துப் போவது, கேதாரி ஐ.சி.எஸ் படிப்பதைப் பார்த்து ஆனந்தப்படுவது, அவன் உடல்நலம் சரியில்லாமல் இருக்கும்போது அவனுக்கு ஆறுதல், தேறுதல் சொல்வது, அம்மாமிக்கும் அவர் சம்பந்தி வீட்டாருக்கும் ஒரு பாலமாய் இருந்து உறவை வளர்ப்பது, இப்படி ஒரு சிறந்த மனிதனாக, நண்பனாக, மனித நேயம் கொண்டவனாகச் சங்கர் விளங்குவது கதைப்பாத்திரச் சிறப்பினைக் காட்டுவதாக உள்ளன. இக்கதையினை நம்மோடு பகிர்ந்து கொள்வதாலும், வாழ்க்கைக்கு வழிகாட்டும் அளவிலும் கதைமாந்தனாகிய சங்கர் நம் மனத்தைக் கவர்கிறான்.

- **நரசிம்மய்யர்**

இவர் ஜமீன் பரம்பரையைச் சார்ந்தவராக இருந்தாலும் சாதாரண நிலையிலிருக்கும் கேதாரி குடும்பத்தோடு நல்லுறவை வளர்த்துக் கொள்வது கதைமாந்தரின் சிறப்பினைக் காட்டுவதாய் உள்ளது. அம்மாமியே தைரியமாக மகனை வெளிநாடு அனுப்பிவைக்க விரும்பும்போது, அந்தக் காலகட்டத்தில் அதற்கிருந்த தடைகளைப் பொருட்படுத்தாதவராய்த் தானும் உடன்படுவது இவரது நல்ல மனப்பான்மையைக் காட்டுகிறது. கேதாரி சீமைக்குச் சென்ற பிறகு அம்மாமியைத் தங்களுடன் வைத்துக்கொள்ள அவர் விருப்பம் தெரிவிப்பதிலிருந்து அவரின் நல்ல மனம் வெளிப்படுகிறது. சம்பந்தி பணம் கேட்டு எழுதிய கடிதத்தைப் பார்த்து விட்டு அவருக்குப் பணம் அனுப்ப விரும்புவது அவரின் மனித நேயத்தைக் காட்டுவதாயுள்ளது. இங்ஙனம் இக்கதைப்பாத்திரம் தனக்கும், பிறருக்கும் நன்மை விளைவிக்கும் அளவில் வாழும் அவருடைய வாழ்க்கை பயனுடையதாய் வெளிப்படுகிறது.

### 'கேதாரியின் தாயார்' சிறுகதையின் சமூகப் பயன்

இக்கதையின் படைப்பாளர் கல்கி அவர்கள் கதையின் தொடக்கத்திலேயே இது சமூக நோக்கம் கொண்ட கதை என்பதைத் தெளிவுபடுத்தி விடுகிறார். இச்சிறுகதையின் ஒவ்வொரு நிகழ்வும் சமூகப் பயனுக்கு இடமளிப்பதாகவே உள்ளது. இக்கதை கற்பிக்கும் சமூகப்பாடம் அனைத்து மக்களும் அறிய வேண்டிய

ஒன்றாகவே உள்ளது. இக்கதையின் சமூகப் பயன்களைப் பின்வரும் அளவில் காணலாம்.

- அர்த்தமற்ற சாஸ்திர, சம்பிரதாயங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பது கூறப்படுகிறது.
- கேதாரியின் தாயார் புத்திசாலியாக இருந்தும் கூட பிராமணச் சாதியின் வழக்கங்களுக்கு உட்படுவது சமூகத்தின் போக்கிற்கு ஏற்ப நடக்க வேண்டிய கட்டாயத்தைக் காட்டுகிறது. இதைப் பற்றிச் சமூகம் சிந்திக்க வேண்டும் என்பது எடுத்துரைக்கப் படுகிறது.
- சில வேளைகளில் சமூகப் பழக்க வழக்கங்கள் மனிதர்களின் தனித்தன்மையைப் பாதிப்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

**எ.கா:**

தன்னம்பிக்கை கொண்ட, முற்போக்குச் சிந்தனையுடைய அம்மாமி சாஸ்திர, சம்பிரதாயங்களுக்கு உட்படுவது.

ஐ.சி.எஸ் படித்த கேதாரி அம்மாவின் அலங்கோலத்தைப் பார்த்து மனம் பலவீனப்பட்டுப் போனது.

- 18 வருடம் பிரிந்த கணவனுக்காக, அவன் இறந்த பிறகு அம்மாமிக்குச் சடங்குகள் செய்யப்படுவது தேவையற்றதாகக் கருத இடமளிக்கிறது. எனினும் அது அந்தக் காலத்திலிருந்த ஒரு சமூக வியாதியாகப் படைப்பாளரால் சுட்டப்பட்டு, அது தவிர்க்கப்பட வேண்டும் என்பது உரைக்கப்படுகிறது.
- கேதாரி தன் தாய்க்குச் செய்யப்பட்ட அலங்கோலத்தைச் சமூக அவலமாகக் கருதுவதால், சமூக மறுமலர்ச்சிக்கு வித்திடுபவனாகக் காட்டப்படுகிறான்.
- அம்மாமி போன்றவர்களை 'வாழாவெட்டி' என்று இகழும் குறைபாடுடைய சமூகத்தின் போக்கு மாறவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

- [illegible] இளம் வயது [illegible] அவல நிலை ஏற்படுவதைக் காட்டிச் சமூகம் இத்தகைய சமூகச் சிக்கல்களிலிருந்து விடுவித்துக் கொள்ளப் பாடுபட வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது.
- 'மொட்டைப் பாப்பாத்தி முகத்தில் விழித்தால் பாவம்' என்னும் சமூகத்தின் போக்கு மாற வேண்டும் என்பது காட்டப்படுகிறது.
- ஒரு சமூகத்தின் சாஸ்திரங்கள் அச்சமூகத்தினரின் மனநலத்தைப் பேண வேண்டுமே ஒழிய, மனநலம் பாதிப்பதற்குக் காரணமாகக் கூடாது என்பது இக்கதையின் சமூகப் பயனாக எடுத்துக் கூறப்படுகிறது.

# *தியாக பூமி* (திரைப்படம்)

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%95_%E0%AE%AA%E0%AF%82%E0%AE%AE%E0%AE%BF_(%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%9F%E0%AE%AE%E0%AF%8D)

**தியாக பூமி**



| | |
|---|---|
| **இயக்கம்** | கே. சுப்பிரமணியம் |
| **தயாரிப்பு** | கே. சுப்பிரமணியம்<br>எம். யு. ஏ. சி |
| **கதை** | கல்கி |
| **இசை** | மோதி பாபு குழுவினர் |
| **வெளியீடு** | மே 20, 1939 |
| **நீளம்** | 17000 அடி |

| | |
|---|---|
| நாடு | இந்தியா |
| மொழி | தமிழ் |

**தியாக பூமி** 1939 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். கே. சுப்பிரமணியம் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் டி. கே. பட்டம்மாள், வத்சலா ஆகியோர் பாடல்களைப் பாடியிருந்தனர். இப்படத்தின் கதையானது கல்கி எழுதிய தியாகபூமி புதினத்தை அடிப்படையாகக் கொண்டது.

## நடிகர்கள்

| நடிகர் | பாத்திரம் |
|---|---|
| பாபநாசம் சிவன் | சம்பு சாஸ்திரி |
| கே. ஜே மகாதேவன் | சிறீதரன் |
| ஜாலி கிட்டு ஐயர் | ராஜாராமையர் |
| பி. ஆர். இராஜகோபாலய்யர் | நல்லான் |
| சேலம் சுந்தர சாஸ்திரி | தீட்சிதர் |
| எஸ். இராமச்சந்திர ஐயர் | மேயர் |
| கோமாளி சாம்பு | செவிட்டு வைத்தி |
| எஸ். ஏ. அய்யர் (இலங்கை) | நீதிபதி |
| எஸ். டி. சுப்புலட்சுமி | சாவித்திரி |
| பேபி சரோஜா | சாரு |
| கே. எஸ். லலிதா | ராதா |
| கே. என். கமலம் | மங்களம் |

## பாடல்கள்

தியாக பூமி திரைப்படத்தில் 17 பாடல்கள் இடம்பெற்றிருந்தன.] மோதி பாபு குழுவினர் பாடல்களுக்கு இசையமைத்திருந்தனர்.

| பாடல் | பாடியவர்(கள்) | இராகம்-தாளம் | குறிப்பு |
|---|---|---|---|
| *பாரத புண்ய பூமி - ஜெயபாரத புண்யபூமி* | டி. கே. பட்டம்மாள் | குந்தளவராளி - ஆதி | முகப்புப் பாடல் |
| *ஶ்ரீ ராமபத்ரா* | பாபநாசம் சிவன் & குழுவினர் | மாண்டு - ஆதி | |
| *பட்டாஸ் பட்டாஸ் பாரீர் பாரீர்* | எஸ். டி. சுப்புலட்சுமி | | சலோ சலோ மெட்டு |
| *துன்புறவே எனைப் படைத்த* | எஸ். டி. சுப்புலட்சுமி | பியாக் | தொகையறா |

| | | | |
|---|---|---|---|
| *பிறவி தனிலே சுதினமிதே* | எஸ். டி. சுப்புலட்சுமி | | அஜபசுரத மெட்டு |
| *ஸ்ரீ ஜக தம்பிகையே தீன தயாபரி சங்கரி* | பாபநாசம் சிவன் | லதாங்கி - ரூபகம் | |
| *நவ சித்தி பெற்றாலும் சிவ பக்தி இல்லாத* | பாபநாசம் சிவன் | கரகரப்பிரியா - சாப்பு | நீலகண்ட சிவன் கீர்த்தனை |
| *சுருங்கார லகரி* | பாபநாசம் சிவன் | நீலாம்புரி - ஆதி | |
| *தேடித் தேடி அலைந்தேனே* | பாபநாசம் சிவன் | செஞ்சுருட்டி - ஆதி | |
| *வாழும் மனை உடல் ஆடை* | பாபநாசம் சிவன் | | விருத்தம் |
| *கிருஷ்ணா நீ வேகமாய் வாராய்* | வத்சலா | யமன் கல்யாணி - மிச்ரம் | நடனம்[2] |
| *உறவே பிரிந்தோமே நாமே* | வத்சலா | | இந்துத்தானி நடனம் |
| *ஜெய ஜெய ஜெய தேவி* | எஸ். டி. சுப்புலட்சுமி, பேபி சரோஜா | | இந்துத்தானி மெட்டு |
| *சாகே தாதிப ராமா ராம விபோ* | | | மீராகோப்ரபு மெட்டு |
| *தேச சேவை செய்ய வாரீர்* | டி. கே. பட்டம்மாள் | | இந்துத்தானி மெட்டு[3] |
| *சொல்லு காந்தி தாத்தாவுக்கு ஜே ஜே ஜே* | பேபி சரோஜா | | இந்துத்தானி மெட்டு |
| *பந்தமகன்று நம் திருநாடு உய்த்திட வேண்டாமோ* | டி. கே. பட்டம்மாள் | | இந்துத்தானி மெட்டு[4] |

## *தடை விதிக்கப்பட்ட "தியாக பூமி"..யும் கல்கியும், எஸ்.எஸ்.வாசனும்...!!!*

https://vimarisanam.com/2019/09/05/%E0%AE%A4%E0%AE%9F%E0%AF%88-%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F-%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%95/

**1935-40-50-**களில் தமிழுலகம் அறிந்த மிகப்பெரும் சாதனையாளர்கள்

கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் எஸ்.எஸ்.வாசன் ஆகியோர்.

ஆனந்தவிகடன் பத்திரிகையின் உரிமையாளர் எஸ்.எஸ்.வாசன். அதன் ஆசிரியர் கல்கி என்கிற புனைபெயருடன் அறியப்பட்ட ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

பிற்காலத்தில், கல்கி கிருஷ்ணமூர்த்தி அவரது நண்பரான எஸ்.சதாசிவம் (திருமதி எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி அவர்களின் கணவர் ) அவர்களுடன் சேர்ந்து துவங்கிய வார இதழான கல்கியில் வெளிவந்த சரித்திரத் தொடரான பொன்னியின் செல்வன் தான் இதுவரை தமிழில் வெளிவந்த சரித்திர நாவல்களிலேயே மிகச்சிறந்தது என்று கூறலாம். இன்றைய இளைஞர்கள் கூட பொன்னியின் செல்வனையும், அதன் மூலம் கல்கியையும் அறிவார்கள். இன்றும் புத்தகக் கண்காட்சிகளில் அதிகம் விற்பனையாகும் நாவல்களில் ஒன்று பொன்னியின் செல்வன்.

நான் கீழே எழுதுவது பொன்னியின் செல்வனுக்கும் முந்தைய – தியாக பூமி'யின் கதை...!!!

பத்திரிகை தொழிலில் ஓரளவுக்கு பணம், புகழ் ஈட்டிய ஆனந்த விகடன் வாசன், அடுத்து தேர்ந்தெடுத்தது திரைப்படத்துறை.

கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விகடனில் எழுதிய 'தியாகபூமி' தொடர்கதையை திரைப்படமாக தயாரிக்க முன்வந்தார் டைரக்டர் கே.சுப்ரமணியம்.( புகழ்பெற்ற

பரதநாட்டிய கலைஞர் பத்மா சுப்ரமணியன் அவர்களின் தந்தை....).. டைரக்டர் கே.சுப்ரமணியத்தின் விருப்பத்தை ஏற்ற வாசன் 'தியாகபூமி' படத்தை தயாரிக்க அனுமதியளித்தார்.

கல்கி எழுதிய 'தியாகபூமி' கதை, ஆனந்த விகடன் வார இதழில் தொடர்கதையாக வெளிவரத் தொடங்கியபோதே –
ஏறத்தாழ அதே நேரத்தில் – சினிமா படப்பிடிப்பும் தொடங்கியது.

'தியாகபூமி' படத்திற்கு பண முதலீடு செய்த வாசன், அதை விளம்பரப்படுத்த ஒரு புது வியாபார நுணுக்கத்தை கண்டுபிடித்தார்.

சாதாரணமாக தொடர்கதையில் வரும் ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் வார இதழில்,ஒரு வரையப்பட்ட சித்திரம் போடப்படுவது வழக்கம்.

ஆனால் 'தியாகபூமி' நாவலுக்கு வாசன்,அப்போது எடுக்கப்பட்டு வந்த திரைப்படத்தின் காட்சிகளையே 'விகடனில்' பிரசுரித்தார்.

இது நாவலுக்கு நிஜத்தன்மையை ஏற்படுத்தியதோடு அல்லாமல், தியாகபூமி திரைப்படத்திற்கு எடுக்கப்படும்போதே, மக்கள் மத்தியில் ஒரு பலத்த எதிர்பார்ப்பையும், ஆதரவையும் உருவாக்கியது.

படத்தைப் பற்றிய மெகா விளம்பரமாகவும் இது அமைந்தது. அந்நாளில் யாருமே செய்திராத ஒரு புதுமை இது. வாசன் ஒவ்வொன்றையும், புதுமையாகவும் நேர்த்தியாகவும் செய்து முடிப்பதில் விசேஷத் திறமை பெற்றவர். வாசனின் புதுமை விரும்பும் மனம், அவ்வப்போது ஏதாவது ஒன்றை புரட்சிகரமாகவோ, புதுமையாகவோ செய்துகொண்டேஇருக்கும். இது வாசனுக்கு இயல்பாக வாய்த்த சிறப்பான குணம்.

<u>தியாகபூமி தொடர்கதையின் சுருக்கம்</u> :




...


தியாக பூமி
டைரக்ஷன்
கே. சுப்ரமண்யம்
கதை:
"கல்கி"

...




அமரர் கல்கியின்
தியாக பூமி
படங்களுடன்
சாரதா பதிப்பகம்

...

**'தியாகபூமி'** படத்தின் கதாநாயகி சாவித்திரியாக எஸ்.டி.சுப்புலட்சுமியும், கதாநாயகன் ஸ்ரீதரனாக கே.ஜே. மகாதேவனும் நடித்தனர். கதாநாயகி சாவித்திரி கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள். அதிகம் படிப்பறிவு இல்லாதவள். கதாநாயகன் ஸ்ரீதரன் மேல் நாட்டிற்கு சென்று படித்தவன்.

ஏற்கனவே ஒரு வெள்ளைக்காரப் பெண்ணுடன் காதல் வயப்பட்ட அவன், தனது தாயாரின் வற்புறுத்தலால், சாவித்திரியை மணக்கிறான். புகுந்த வீட்டில், சாவித்திரி பல கொடுமைகளுக்கு ஆளாகிறாள். இதுபற்றி அவள், தன் தந்தை சம்பு சாஸ்திரிக்கு (பாபநாசம் சிவன்) எழுதும் கடிதங்களை, அவளது சித்தி எரித்து விடுகிறாள். மாமியார் வீட்டில் இருந்து விரட்டப்படும் சாவித்திரி, ஒரு

ஆஸ்பத்திரியில் ஒரு பெண் குழந்தைக்கு (பேபி சரோஜா) தாய் ஆகிறாள். குழந்தையுடன் அவள் தற்கொலை செய்து கொள்ள முயல, அங்கே தந்தை சம்பு சாஸ்திரியின் குரல் கேட்க, குழந்தையை விட்டு விட்டு சென்று விடுகிறாள்.

அக்குழந்தையை, தன் சொந்த பேத்தி என்று அறியாமலேயே, சாருமதி என்று பெயரிட்டு வளர்க்கிறார், சம்பு சாஸ்திரி. சாவித்திரி, பம்பாய் சென்று தன் பணக்கார அத்தையின் உதவியினால் உயர் கல்வி பயில்கிறாள். ஏராளமான சொத்துக்களுடன், நாகரீக மங்கையாக 'உமாராணி' என்ற பெயரில் புகழ் பெற்று விளங்குகிறாள்.

ஐந்தாண்டுகள் உருண்டோடுகின்றன. தன் மகள் என்று தெரியாமலேயே சாருமதியை சந்தித்து பாசம் கொள்கிறாள், உமாராணி (சாவித்திரி).

மோசடி குற்றத்துக்காக கைது செய்யப்படும் ஸ்ரீதரனை உதவிசெய்து, மீட்கிறாள். தன் மனைவி சாவித்திரி தான் உமாராணி என்பதை அறியும் ஸ்ரீதரன், அவளுடன் மீண்டும் வாழ விரும்புகிறான்.

ஆனால், அவன் கோரிக்கையை சாவித்திரி நிராகரிக்கிறாள். அவள் தன்னுடன் வாழவேண்டும் என்று கோர்ட்டில் வழக்குத்

தொடருகிறான், ஸ்ரீதரன். ஆனால் சாவித்திரியோ, 'கர்ப்பிணி என்றும் பாராமல் என்னை விரட்டி அடித்த அவருடன் இனி வாழமாட்டேன். வேண்டுமானால், நான் வசதியுடன் இருப்பதால் அவருக்கு ஜீவனாம்சம் தருகிறேன்' என்று கோர்ட்டில் கூறுகிறாள்.

இறுதியில், சுதந்திரப் போரில் ஈடுபட்டு சிறை செல்கிறாள், சாவித்திரி. ஸ்ரீதரனும், சுதந்திரப் போராட்டத்தில் சிறை செல்கிறான். பிரிந்த குடும்பம் இறுதியில் ஒன்று சேருகிறது.

1939-ம் ஆண்டு மே 20-ம் தேதி 'தியாக பூமி' படம் வெளியானது... கதையமைப்பு, நடிப்பு, இயக்கம் எல்லாவற்றிலும் படம் சிறப்பாக

அமைந்திருந்தது. டி.கே.பட்டம்மாள் பாடிய, பாரதியாரின் தேச பக்திப் பாடல்கள் கணீர் என்று ஒலித்தன.

'ஆணுக்கு பெண் அடிமை இல்லை' என்ற முற்போக்கான கருத்தை மையமாக கொண்டிருந்ததால் படத்தை பெண்கள் மிகவும் விரும்பிப் பார்த்தனர்.

'தியாக பூமி புடவை' 'தியாகபூமி வளையல்' என்ற பெயர்களில் சேலைகளும், வளையல்களும் சந்தையில் விற்பனை செய்யப்பட்டன. படம் மிக வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருந்தது.

படம் திரையிடப்படும்போது, சென்னை மாகாணத்தில், ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் ஆட்சி செய்துகொண்டிருந்ததால், சென்சாரில் எந்தவித தடங்கலும் இன்றி வெளிவந்து விட்டது. ஆனால், 2-ம் உலகப்போர் துவங்கியவுடன், பிரிட்டிஷாரை எதிர்த்து, ராஜாஜி தலைமையிலான அமைச்சரவை ராஜினாமா செய்து விட்டது.

இதன் விளைவுகள் தியாகபூமி படத்தை பாதித்தன. படத்தில் இடம் பெற்றிருந்த சில உரையாடல்கள், தேசபக்தி பாடல்கள், சுதந்திரப் போராட்ட காட்சிகள் ஆகியவை காரணமாக படம் மறு தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டு - பிரிட்டிஷ் அரசு நிர்வாகம் இந்த படத்தை திரையிட தடை விதிக்க முடிவு செய்தது.

ஆனால், தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே இத்தகவல் வெளியே தெரிந்து விட்டதால், படத்தை விடிய விடிய இடைவெளியின்றி, மக்களுக்கு இலவசமாக காட்ட எஸ்.எஸ்.வாசனும், டைரக்டர் கே.சுப்பிரமணியமும் ஏற்பாடு செய்தனர்.

மக்கள் வெள்ளம் திரண்டு தியேட்டர்களின் வாசலில் மொய்த்தது. மக்கள் திரளால் சென்னை கெயிட்டி தியேட்டரின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்த சம்பவமும் நடந்தது. அப்போது விதிக்கப்பட்ட தடை, பல ஆண்டுகளுக்குப் பிறகு, சுதந்திரத்திற்கு பின் தான் அகற்றப்பட்டது.

( இதில் உள்ள சில தகவல்களுக்காக பேராசிரியர் வா.பாலகிருஷ்ணன் அவர்களுக்கு நன்றி .. )

# தியாகபூமி (நாவல்)

https://tamil.wiki/wiki/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%95%E0%AE%AA%E0%AF%82%E0%AE%AE%E0%AE%BF_(%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%B2%E0%AF%8D)

தியாகபூமி (நாவல்) (1939) கல்கி எழுதிய நாவல். ஆனந்த விகடன் இதழில் தொடராக வெளிவந்தது. சுதந்திரப்போராட்டப்பின்னணியில் ஒரு குடும்பத்தின் வாழ்க்கையைச் சொல்லும் படைப்பு. பொதுவாசகர்களுக்குரிய எளிமையான கதையோட்டம் கொண்டது. காந்திய இயக்கத்தின் கொள்கைகளான மதுவிலக்கு, பெண்கல்வி, தீண்டாமை ஒழிப்பு, தேச விடுதலை ஆகிய கருத்துக்களை முன்வைப்பது இந்நாவல்.

## எழுத்து, பிரசுரம்

கல்கி ஆனந்த விகடனின் பொறுப்பாசிரியராக இருந்தபோது 1938 ,1939-ம் ஆண்டுகளில் தொடராக வெளிவந்த நாவல் இது. கோடை, மழை, பனி, இளவேனில் என நான்கு பாகங்களாக வெளிவந்தது. ஒவ்வொரு பகுதியும் முறையே 11, 10, 16, 32 அத்தியாயங்களாக 69 அத்தியாயங்கள் கொண்டது. இயக்குநர் கே.சுப்ரமணியத்திடம் கதைச்சுருக்கத்தைச் சொல்லிவிட்டு கல்கி இதை எழுதினார். கதை வெளிவரும்போது படப்பிடிப்பும் நடைபெற்றது. படத்திலுள்ள காட்சிகளின் புகைப்படங்களே கதையிலும் வெளியாயின. கதை முடிந்த அடுத்தவாரமே படம் வெளியாகியது. மே 20, 1939 அன்று தியாகபூமி திரைப்படம் வெளியாகியது. ஆனால் அன்றிருந்த ஆங்கிலேய அரசால் தேசத்துரோகக் குற்றம்சாட்டப்பட்டு படம் தடைசெய்யப்பட்டது. பின்னர் தடை விலக்கிக்கொள்ளப்பட்டது.

## கதைச்சுருக்கம்




தியாகபூமி படம்

தஞ்சை மாவட்டத்து நெடுங்கரை என்னும் ஊரில் வாழும் சம்பு சாஸ்திரி, அவருடைய மனைவி பாக்கியம். அவர்களின் மகள் சாவித்திரி. பாக்கியம் இறந்துவிடவே சாவித்திரியை வளர்ப்பதற்காகச் சம்பு சாஸ்திரி மங்களம் என்ற பெண்ணை மீண்டும் மணம் புரிந்து கொண்டார். சாவித்திரியை மங்களமும், அவளது தாயார் சொர்ணம்மாளும் சேர்ந்து பல வகையில் கொடுமைப்படுதுதுகிறார்கள். சம்பு சாஸ்திரி, சாவித்திரிக்கு மணம் முடிக்க எண்ணி நரசிங்கபுரத்தில் வாழ்ந்த இராசாராமையர் - தங்கம்மாள் என்போரின் மகனான ஸ்ரீதரனை மணமகனாகத் தேர்ந்தெடுத்தார். சம்பு சாஸ்திரிகள் ஆற்றுவெள்ளத்தில் வீடிழந்த தாழ்த்தப்பட்ட மக்களை தன் வீட்டு மாட்டுக்கொட்டகையில் தங்கவைத்ததனால் அக்ரஹாரத்து மக்களால் சாதிவிலக்கம் செய்யப்பட்டவர். அவருடைய தங்கை மீனா இராமச்சந்திரன் என்பவரை மணந்திருந்தாள். ராமச்சந்திரன் காணாமல் போகிறான். கும்பகோணம் மகாமகம் சென்ற மீனா தன் கணவன் தேசசேவையில் ஈடுபட்டதை அறிந்து அவனுடன் சென்றுவிடுகிறாள். அவர்கள் மும்பைக்குச் சென்று வணிகம் செய்து செல்வந்தாரகிறார்கள். சாதிவிலக்கம், தங்கை காணாமலானது ஆகியவற்றால் சம்பு சாஸ்திரி கூடுதலாக வரதட்சிணை கொடுக்கநேர்கிறது.

கணவன் இல்லத்தில் கடுந்துயருக்கு உள்ளாகும் சாவித்ரி அங்கிருந்து தப்பி சம்புசாஸ்திரிகளை தேடிவருகிறாள். அங்கே அவர் இல்லை. அவர் பிழைப்புதேடி சென்னை சென்றுவிட்டார். சாவித்ரி அனாதைகளுக்கான மகப்பேறு விடுதியில் ஒரு குழந்தையை பெற்றெடுக்கிறாள். சென்னைக்கு

பிழைப்பு தேடி வரும் சாவித்ரி தன் தந்தையை கண்டுபிடிக்கிறாள். அவர் தூங்கும்போது அருகே குழந்தையை விட்டுவிட்டு மும்பைக்குச் செல்கிறாள். அங்கே ஒரு குடும்பத்தில் பணிப்பெண்ணாக ஆகிறாள். சம்புசாஸ்திரிகள் குழந்தையை அவர் வாழும் சாவடிக்குப்பத்திற்கு கொண்டுசெல்கிறாள். அது சாருமதி என்றபெயருடன் வளர்கிறது.

சாவித்ரி பணிப்பெண்ணாகச் சென்ற குடும்பம் அவளுடைய காணாமல் போன அத்தையின் குடும்பம்தான். அத்தையும் கணவனும் மறைகிறார்கள். அவர்களின் சொத்து சாவித்ரிக்கு வருகிறது. சாவித்ரி உமாராணி என்னும் பெயருடன் ஊர் திரும்பி தன் மகளை பார்க்கிறாள். சாருமதியை தானே வளர்ப்பதாக கேட்கிறாள். சாஸ்திரி அதற்கு உடன்படாமல் சாருமதியுடன் தேசசேவைக்குச் செல்கிறார். இந்நிலையில் ஸ்ரீதரன் ஒரு வங்கி மோசடிச் சிக்கலில் மாட்ட உமாராணி அவனை காப்பாற்றுகிறாள். ஸ்ரீதரன் உமாராணி தன் மனைவி என்று கண்டுகொண்டு அவள் தன்னுடன் வரவேண்டுமென வழக்கு தொடுக்கிறான். வழக்கு பல படிகளாக நிகழ்கிறது. கணவனுடன் வாழ விரும்பாத சாவித்ரியும் தேசசேவையில் ஈடுபடுகிறாள். ஸ்ரீதரனும் தேச சேவையில் ஈடுபடுகிறான். அவன் மீதான கசப்பை அகற்றி சாத்வித்ரி அவனை ஏற்கிறாள். அவர்கள் தங்கள் மகளுடன் இணைகிறார்கள்.

## கதைமாந்தர்

- சாவித்ரி - கதைநாயகி. கணவன் இல்லத்தாரால் கொடுமைப்படுத்தப்பட்டு பலதுன்பங்களுக்கு ஆளாகிறாள்
- சம்பு சாஸ்திரி - சாவித்ரியின் தந்தை. தேச சேவை செய்பவர். காந்தியவாதி
- ஸ்ரீதரன் - சாவித்ரியின் கணவன்
- சாருமதி - சாவித்ரியின் மகள்
- மீனா - சாவித்ரியின் அத்தை
- ராமச்சந்திரன் - மீனாவின் கணவன்

படைப்பு. தமிழில் தொடர்கதைகள் மிகுந்த வரவேற்பைப் பெற்ற காலகட்டத்தில் வெளிவந்தது. காந்தி யக்கருத்துக்களையும் தேசியப்போராட்டச் செய்திகளையும் பரப்பும் நோக்கம் கொண்டது. இந்நாவலின் கட்டமைப்பு எதிர்பாராத திருப்பங்கள், தற்செயல்கள், நாடகத்தனமான சந்தர்ப்பங்களால் ஆனது.

## The Movie Data Base

https://www.themoviedb.org/person/1422255-kalki-krishnamurthy

# Kalki Krishnamurthy

## Biography

Kalki (Tamil: கல்கி) was the pen name of R. Krishnamurthy (9 September 1899 – 5 December 1954), a noted Tamil freedom fighter, social crusader, novelist, short story writer, journalist, humorist, satirist, travel writer, script-writer, poet, film & music critic, Indian independence activist and connoisseur of the arts writer from Tamil Nadu, India. He derived his pen name from the suffixes of his wife name Kalyani and his name Krishnamurthy in Tamil form கல்யாணி and கிருஷ்ணமூர்த்தி as Kalki(கல்கி) "Kalki avatar", the tenth and last avatar of the Hindu God Vishnu. His writings includes over 120 short stories, 10 novelettes, five novels, three historical romances, editorial and political writings and hundreds of film and music reviews.

[அனைத்து திரைப்படங்கள்]

## காணொளிகள்

01] பேனா போராளி கல்கி
https://www.youtube.com/watch?v=kePQ0c0Jwu0 [30:53]

02] Kalki Krishnamurthy & D K Pattammal/D K Jayaraman
https://www.youtube.com/watch?v=mrX0BFYUzbI [14:23]

03] The Many Avatars of Kalki Krishnamurthy
https://www.youtube.com/watch?v=pZw5Ki9OOYg [30:55]

04] Kalki Krishnamurthy Memorial Trust - Book Release Function
https://www.youtube.com/watch?v=iZF6yVVit6U [2:24:33]

05] Kalki Krishnamurthy Memorial Trust - Award function, Concert by Smt. Aishwarya Vidhya Raghunath.
https://www.youtube.com/watch?v=EMSBFF-esFk [3:30:05]

06] கோட்டை | Kalki Krishnamurthy
https://www.youtube.com/watch?v=7So2VFtqKgo [22:56]

07] Kalvanin Kadhali by Kalki Krishnamurthy
https://www.youtube.com/watch?v=-NU-uhuy66I [37:33]

08] Vidwan Palghat R.Ramprasad for Kalki Krishnamurthy Memorial Trust
https://www.youtube.com/watch?v=pGK_kjeH0GU [3:02:15]

# காலவரிசை



கல்கி கிருஷ்ணமூர்த்தி (1899-1954) நவீன தமிழ் இலக்கியத்தை வடிவமைத்த ஒரு முன்னோடி தமிழ் எழுத்தாளர், பத்திரிகையாளர் மற்றும் சுதந்திர ஆர்வலர் ஆவார். முக்கிய படைப்புகளில் *கள்வனின் காதலி* (1937), *தியாக பூமி* (1938-39), *அலை ஓசை* (1948), மற்றும் அவரது மகத்தான படைப்பு *பொன்னியின் செல்வன்* (1950-1954), பல படைப்புகள் இப்போது கல்கி வாழ்க்கை வரலாறு மற்றும் Amazon.in ஆகியவற்றால் வெளியிடப்பட்டுள்ளன .

**மேஜர் வாழ்க்கை மற்றும் இலக்கிய காலவரிசை**

- **1899:** செப்டம்பர் 9 அன்று தமிழ்நாட்டின் புத்தமங்கலத்தில் பிறந்தார்.
- **1921:** ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்பதற்காகப் படிப்பைப் பாதியில் நிறுத்தினார்; முதல் கைது.
- **1931 மற்றும் 1940:** இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றதற்காகக் கைது செய்யப்பட்டார்.
- **1937:** கள்வனின் காதலி (*திருடன் காதலன்*) வெளியிடப்பட்டது .
- **1938–1939:** தியாக பூமி *(தியாக பூமி)* வெளியானது .
- **1941:** பிரபலமான *கல்கி* இதழைத் தொடங்கினார் .
- **1942:** மகுடபதி *வெளியிடப்பட்டது* .
- **1947:** அபலையின் கணீர் *மற்றும்* சோலைமலை இளவரசி *வெளியிடப்பட்டது* .
- **1948:** அலை ஓசாய் (*அலைகளின் ஓசை*) வெளியிடப்பட்டது .
- **1950-1954:** கல்கி *இதழில் பொன்னியின் செல்வன்* (பொன்னியின் மகன்) *என்ற மாபெரும்* படைப்பைத் *தொடராக வெளியிட்டார்* .

- **1950:** *வெளியிடப்பட்டது தேவகியின் கணவன் மற்றும் மோகினி தீவு*.
- **1951:** பொய்மான் கரடு *வெளியிடப்பட்டது* .
- **1951:** *சங்கீத கலாநிதி* விருது பெற்றார்.
- **1952:** புன்னைவனத்துப் புலி *வெளியிடப்பட்டது* .
- **1954:** *அமர தாரா வெளியிடப்பட்டது* .
- **1954:** *டிசம்பர்* 5 *அன்று காலமானார்*.
- **1956:** *அலை ஓசாய் நூலுக்காக மரணத்திற்குப் பின் சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது* .

**முக்கிய வரலாற்று காதல் கதைகள்**

- *சிவகாமியின் சபதம்* (சிவகாமியின் சபதம்)
- *பொன்னியின் செல்வன்* (பொன்னியின் மகன்)
- *பார்த்திபன் கனவு* (பார்த்திபன் கனவு)

## Complete Guide to Kalki Krishnamurthy Novels

### List, Summary, Legacy & Historical Importance

https://www.india123.co.in/tamil-nadu/naval/kalki-krishnamurthy-novels.php

Kalki Krishnamurthy stands as one of the most celebrated literary icons in Tamil literature. Known for his rich storytelling, historical research, and emotionally engaging characters, Kalki's novels continue to inspire readers even decades after their publication. His writings beautifully combine imagination, historical facts, cultural heritage, political awareness, and human emotions.

Among his works, *Ponniyin Selvan*, *Sivagamiyin Sabadham*, and *Parthiban Kanavu* remain timeless masterpieces. However, Kalki has also written several other remarkable novels that highlight social issues, patriotism, romance, drama, village life, and reformist ideals.

This comprehensive article provides the complete list of Kalki Krishnamurthy's novels, along with summaries, themes, historical

background, character analysis, and their impact on Tamil literature.

## Who is Kalki Krishnamurthy?

Kalki Krishnamurthy (1899–1954), born Ramaswamy Aiyer Krishnamurthy, was a renowned Tamil writer, freedom fighter, journalist, and critic. His pen name “Kalki” was inspired by the tenth avatar of Vishnu, symbolising reform, renewal, and change.

### Literary Domains

Kalki excelled in:

- Historical fiction
- Social novels
- Short stories
- Political commentaries
- Music and arts reviews

His contribution revived interest in Chola history, Tamil heritage, temple arts, and ancient South Indian culture.

(😊)(😊) கல்கி (😊)(😊)